REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2022 ஏப்ரல் 4 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 80 | Monday 04, April, 2022 | 16பக்கங்கள் | 30/-


## புனித ரமழான் மாதம் ஆரம்பம்



புனித ரமழான் மாதம் ஆரம்பமாகியுள்ளது. ஹிஜ்ரி 1443 புனித ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நேற்று முன்தினம் (02) மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளி வாசலில் நடைபெற்றது.

06

# மின் துண்டிப்பு நேரத்தை குறைக்க பிரதமர் பணிப்பு

## நேற்று முதல் மின்வெட்டு நேரம் பன்மடங்கு குறைப்பு

### மக்களின் ஏனைய சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண பிரதமர் அதிகாரிகளுக்கு பணிப்பு



திட்டமிட்டபடி எரிபொருள் கையிருப்பு கிடைப்பதை கருத்திற்கொண்டு மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம்(02) மின்சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சிக்கு அறிவுறுத்தினார். மின்சாரம் துண்டிக்கப்படும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை குறைக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டி பிரதமர்

06

## இலங்கையை வந்தடைந்தது 40,000 மெ. தொன் டீசல்

### இந்திய கடனுதவியின் ஒரு பகுதியாக வழங்கல்



இலங்கைக்கு இந்தியா அறிவித்த கடன் வசதியின் ஒரு பகுதியான 40,000 மெற்றிக் தொன் டீசல் நேற்று இலங்கையை வந்தடைந்தது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கையாள்வதில் அரசாங்கம் இந்தியாவின் உதவியை நாடியது. நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்திய பயணத்தின் போது பிரதமர் மோடியை சந்தித்து உரையாடியபோது இக்கோரிக்கை விடப்பட்டது.

06

## எதிரணியின் போராட்டங்கள் அரசுக்கு உற்சாகமூட்டும்

### வைராக்கியத்துடன் எதிர்கொள்வோம் – அமைச்சர் டக்ளஸ்



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை மன வைராக்கியத்துடன் எதிர்கொள்வதற்கான உற்சாகமூட்டல்களாகவே எதிர்தரப்பினரால் தூண்டி விடப்பட்டுள்ள போராட்டங்கள் அமைந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மேலும் எதிர்வரும் சில வாரங்களுக்குள் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் சகஜ நிலைக்கு திரும்பும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக நேற்று கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு

06

## பிரதமர் பதவி விலகவில்லை

### பிரதமர் அலுவலகம் அறிவிப்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகியதாக வெளியான செய்திகளில் உண்மையில்லையென்று பிரதமர் அலுவலகம் நேற்று அறிவித்தது.

பிரதமர் பதவி விலகியதாக பல்வேறு ஊடகங்களிலும் வெளியான தகவல்கள் போலியானவையெனவும் அவ்வாறான திட்டமொன்று இல்லையென்றும் பிரதமரின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட கையொப்பமிட்டு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மக்களின் அமைதியான வாழ்க்கைக்கு இடையூறு:

## ஊரடங்குச் சட்டம் அமுல் குறித்து அரசாங்கம் விளக்கம்

### அரச, தனியார் சொத்துக்களை பாதுகாப்பதும் நோக்கம்



நாட்டு மக்களின் அமைதியான வாழ்க்கை, இயல்பு வாழ்க்கை, பொதுச் சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவே

06

## சமூக வலைத்தள முடக்கம் அமைச்சர் நாமல் சீற்றம்

### ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவிப்பு



சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டதனை தாம் ஏற்றுக்கொள்ளபோவதில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில், சமூக வலைத்தளங்களை தடுப்பது போன்ற நடவடிக்கைகள் பயனற்ற செயல் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தானும் தற்போது VPN வழிமுறையைப் பயன்படுத்தி சமூக வலையமைப்புகளை பயன்படுத்துவதாகவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, மேலும் நெருக்கடிகளை

06

## போராட்டங்கள் அமைதியாக நடத்தப்படுதல் வேண்டும்

### வன்முறைகளை அனுமதிக்க முடியாது



மக்கள் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் வன்முறைகளில் ஈடுபடக் கூடாது எனவும், பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்க கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், அண்மையில் ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகாமையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இந்திய இராணுவத்தினர் இலங்கை வந்துள்ளனரா?

### பொய் வதந்தி என்கிறார் கமால் குணரட்ண



இந்திய இராணுவத்தினர் இலங்கை வந்துள்ளனர் என வெளியாகும் செய்திகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண மறுத்துள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற இந்திய இலங்கை இராணுவத்தினரின் கூட்டு பயிற்சி படத்தை அடிப்படையாக வைத்து இந்த பொய்த் தகவல்கள் வெளியாகின்றன என அவர் தெரிவித்துள்ளார். பலநோக்கங்களுக்காக பரப்படும் இவ்வாறான தகவல்களால் மக்கள் பதற்றமடையக்கூடாது என தெரிவித்துள்ள அவர், தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் அதேவேளை எந்த நிலைமையையும் எதிர்கொள்ளும் திறன் அரசபடையினருக்கு உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.


## நோன்பு நேரங்கள்



ஸஹர் முடிவு: 04.37

நோன்பு துறக்கும் நேரம்: 06.20

## இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த 12 இந்திய மீனவர் கைது!



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர். யாழ். நெடுந்தீவுக்கு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை மயிலிட்டிக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைப்பு



பாகிஸ்தானில் நேற்று இம்ரான் கானின் பரிந்துரைக்கமைய பாராளுமன்றத்தை கலைத்து பாகிஸ்தான் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரித்து, பொருளாதார நெருக்கடி எழுந்துள்ள நிலையில், பிரதமர் இம்ரான் கானை பதவிநீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கிடையே, பாகிஸ்தான் பாராளுமன்றம் நேற்று காலை கூடிய போது இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் துணை சபாநாயகரால் இரத்து செய்யப்பட்டது. இந்த தீர்மானம் அரசியலமைப்பு சட்டத்துக்கு

06

## அமைச்சு பதவிகளை விடவும் CWCக்கு மக்களே முக்கியம்

### மக்களின் தீர்மானத்துக்கு தலை வணங்குவோம் – ஜீவன்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



"அமைச்சு பதவிகள் அல்ல, மக்களின் தீர்மானமே காங்கிரசுக்கு முக்கியம். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றாவிட்டால் அரசிலிருந்து இ.தொ.கா. வெளியேறும்" என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அறிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியதாவது,

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசின்

06

## இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க SLFP கோரல்

### ஜனாதிபதிக்கு அவசர கடிதம் அனுப்பிவைப்பு



நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இடைக்கால அரசாங்கத்தை அமைத்து, தாம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இதற்கு ஒரு வார காலத்திற்குள் பதிலை வழங்குமாறும் அவ்வாறில்லையெனின் அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட வேண்டியேற்படும் என்றும் சுதந்திர கட்சி கடிதம் மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக

06

## ICTA தலைவர் நேற்று இராஜினாமா

### தனிப்பட்ட காரணம் என தெரிவிப்பு



தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து ஓஷத சேனாநாயக்க இராஜினாமா செய்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமா செய்வதாக ஓஷத சேனாநாயக்க தெரிவித்தார். ஓஷத சேனாநாயக்க தனது இராஜினாமா கடிதத்தை கடந்த வாரம் தொழில்நுட்ப அமைச்சிடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஊரடங்கு சட்டத்தை மீறி ஐ.ம.ச. ஆர்ப்பாட்டம்



### பொலிஸாரின் உத்தரவையும் மீறி முயற்சி

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில் எதிர்க்கட்சித்

06

## ஊரடங்கு உத்தரவை மீறிய 664 பேர் கைது

### பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு



ஊரடங்கு உத்தரவை மீறிய 664 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் நேற்று காலை வரை ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் 664 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். நாட்டில் சனிக்கிழமை (2) மாலை 6 மணி முதல் திங்கட்கிழமை (4) அதிகாலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

06

## சூழ்நிலைகேற்ப நிதானம் பொறுமை மிக அவசியம்

### முஸ்லிம் மக்களிடம் YMMA பேரவை கோரிக்கை

**மாவத்தகம தினகரன் நிருபர்**



புனித நோன்பு காலத்தில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் நிதானமாகவும் பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி முஸ்லிம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டில் ஏற்பட்டுள்ள விலையேற்றம்,

06

# சர்வதேச செய்திகள்

பாக். அரசியலில் அடுத்தடுத்த திருப்பம்:

# இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் பாராளுமன்றில் நிராகரிப்பு

## பாராளுமன்றத்தை கலைக்கவும் அறிவுறுத்து

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை பாராளுமன்ற பிரதி சபாநாயகர் சட்டவிரோதமானது என்று கூறி தடுத்ததை அடுத்து அவர் பதவி நீக்கப்படுவதில் இருந்து தப்பியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை கலைக்கும்படி இம்ரான் கான் அந்நாட்டு ஜனாதிபதியை கோரியுள்ளார். இதன்மூலம் 220 மில்லியன் மக்கள் தொகை கொண்ட அணு ஆயுத நாடான பாகிஸ்தானில் அரசியல் ஸ்தரமற்ற சூழல் தீவிரம் அடைந்துள்ளது.

இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது நேற்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்த நிலையில், ஆளும் பாகிஸ்தான் தஹ்ரீகே இன்சாப் கட்சியைச் சேர்ந்த தேசிய பேரவையின் பிரதி சபாநாயகர், அந்த நடவடிக்கையை தடுத்தார். அரசியலமைப்பின் 5ஆம் பிரிவை இது மீறுவதாக அவர் குறிப்பிட்டார்.

பிரிவு 5க்கு அமைய, 'தேசத்திற்கு விசுவாசத்தை காட்டுவது அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை கடமை' என்றும் 'அரசியலமைப்பு மற்றும் சட்டத்திற்குக் கீழ்ப்படிவது என்பது ஒவ்வொரு குடிமகன் எங்கிருந்தாலும் மற்றும் பாகிஸ்தானுக்குள் இருக்கும் மற்ற ஒவ்வொரு நபரின் (மீற முடியாத) கடமையாகும்' என்றும் குறிப்பிடப்படுவதாக பாகிஸ்தான் செய்தி இணையதளமான 'டோன்' தெரிவித்துள்ளது.

'ஜனாதிபதிக்கு அறிவுறுத்தல் கிடைத்த உடன், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அரச தொலைக்காட்சியான பீ.டிவியில் நேரடியாக உரையாற்றிய இம்ரான் கான் தெரிவித்தார்.

'நம்பிக்கையில்லா தீர்மானம் நடத்தப்படாவிட்டால் பாராளுமன்றத்தில் உள்ளிருப்புப் போராட்டத்தை நடத்த நாம் தீர்மானித்துள்ளோம்' என்று பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலவால் பூட்டோ சர்தாரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'இந்த சட்ட மீறல் குறித்து உச்ச நீதிமன்றத்தை நாம் நாடியுள்ளோம்' என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நேற்று நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொண்ட நிலையில், இந்த வாக்கெடுப்பில் வெற்றிபெற தமக்கு பெரும்பான்மை இருப்பதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

இதன்போது 342 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் முன்னாள் கிரிக்கெட் வீரராக இருந்து அரசியலுக்கு வந்த இம்ரான் கானை நீக்குவதற்கு எதிர்க்கட்சிக்கு சாதாரண பெரும்பான்மையான 172 வாக்குகள் இருந்தால் போதுமாக இருந்தது.



இந்நிலையில் இம்ரான் கானின் அளும் கட்சியின் சிறிய கூட்டணி கட்சிகள் மற்றும் அவரது சொந்தக் கட்சியைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்தனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் நேரப்படி நேற்றுக் காலை 11.30 மணிக்கு பாராளுமன்றம் கூடியது. அப்போது நம்பிக்கையில்லா தீர்மானம் துணை சபாநாயகரால் ரத்து செய்யப்பட்டது. இந்த தீர்மானம் அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 5க்கு எதிரானது எனக் கூறி தீர்மானத்தை நிராகரித்தார்.

இதையடுத்து, ஏப்ரல் 25ஆம் திகதி வரை பாகிஸ்தான் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னதாக பாகிஸ்தான் பாராளுமன்ற சபாநாயகர் அசாத் குவைசர் நீக்க தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில்தான் துணை சபாநாயகர் தற்காலிக சபாநாயகராக செயல்பட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

தம் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அமெரிக்காவால் முன்னெடுக்கப்படும் சர்வதேச சதி என்று பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.

தனக்கு எதிராக எதிர்க்கட்சிகள் உதவியோடு ஒரு வெளிநாட்டு சதித்திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக கூறிய இம்ரான் கான், இதனை உறுதி செய்யும் அதிகாரபூர்வ ஆவணம் ஒன்றை தேசிய பாதுகாப்பு குழுவும், அமைச்சரவையும் பார்த்துள்ளன என்றும், அதில், இம்ரான் கானை பதவி நீக்கினால், பாகிஸ்தானோடு அமெரிக்காவின் உறவு மேம்படும் என்றும், பாகிஸ்தான் மன்னிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாக இம்ரான் கான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று பிரதமர் பரிந்துரைத்தால் அதை ஜனாதிபதி ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அரசியல் பார்வையாளர்கள் குறிப்பிடுகின்றனர். அப்படி நடக்கும் பட்சத்தில், அடுத்த தேர்தல் நடத்தி முடிவுகள் வரும் வரை நாட்டு நிர்வாகத்தைக் கவனிக்க இடைக்கால பிரதமர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

69 வயதான இம்ரான் கான், ஒரு புதிய பாகிஸ்தானை உருவாக்க வேண்டும் என்ற முழக்கத்தோடும், சில வாக்குறுதிகளோடும் 2018 இல் ஆட்சிக்கு வந்தார்.

ஆனால், விலைவாசியை கட்டுக்குள் வைத்திருப்பது, போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியதால் எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளார்.

பல தசாப்தங்களாக வேரூன்றியிருந்த ஊழலைத் துடைப்பதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த அவர், விண்ணை முட்டும் பணவீக்கம், முடக்கப்பட்ட கடன் போன்ற நிர்வாகச் சுமைகளால் ஆட்சியை நடத்த கூட்டணி கட்சிகளின் ஆதரவை தக்கவைக்கவே போராடினார்.

பாகிஸ்தானை பொறுத்தவரை அரசியல் அதிகாரத்திற்கு முக்கிய ஆதாரமாக இராணுவ பலம் இருந்துவரும் நிலையில், இம்ரான் கான் இராணுவத்தின் ஆதரவையும் இழந்துவிட்டார் என்று சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பாகிஸ்தான் அரசியல் வரலாற்றில் இதற்கு முன் இரு முறை பதவியில் உள்ள பிரதமர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளன. 1989 இல் பெனாசிர் பூட்டோவுக்கும் 2006 ஆம் ஆண்டு சவ்கத் அசிசுக்கும் எதிராகக் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானங்கள் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தற்போதைய இழுபறி சூழல் எவ்வாறு தீர்க்கப்படும் என்பது பற்றி தெளிவில்லாத நிலை உள்ளது.

தலைநகர் இஸ்லாமாபத்தை சூழவிருக்கும் அரச கட்டடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் 'யுனியன் பே' முறைக்கு மாறும் ரஷ்யா

விசா மற்றும் மாஸ்டர்காட் பயன்பாடு இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதற்கு மாற்றாக ரஷ்யா, சீனாவின் யுனியன் பே, அட்டை முறையை பயன்படுத்துவதாக செய்தி வெளியாகியுள்ளது.

ரஷ்ய மற்றும் உக்ரைன் மோதல் வெடித்ததை அடுத்து ரஷ்யாவை இலக்கு வைத்து கடுமையான மேற்கத்திய தடைகள் அமுலுக்கு வந்தன. இதில் சர்வதேச பண பரிவர்த்தனை பொறிமுறைகளாக மாஸ்டர்காட், விசா, அமெக்ஸ் மற்றும் ஸ்விப்ட் ஆகியன சீனாவில் இடைநிறுத்தப்பட்டன.

பெப்ரவரி பிற்பகுதியில், உக்ரைன் நெருக்கடி நெருங்கிய நிலையில், ரஷ்யாவில் இருந்து கோதுமை இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் மூலமும், சீனாவிற்கு 10 பில்லியன் கன மீட்டர் எரிவாயு வழங்குவதற்கான எரிசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் மூலமும் சீனா ரஷ்ய பொருளாதாரத்தை வலுப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.




## மூன்று பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலிய படையால் சுட்டுக்கொலை

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகருக்கு அருகில் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருடனான துப்பாக்கிச் சண்டையில் மூன்று பலஸ்தீன போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை இரவு கார் ஒன்றில் பலஸ்தீனர்கள் தாக்குதல் ஒன்றை தொடுத்ததோடு அவர்களை கைது செய்ய முயன்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மீதும் தாக்குதல் தொடுத்தனர் என்று இஸ்ரேலிய பொலிஸ் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



இந்த மோதலின்போது நான்கு இஸ்ரேலிய துருப்புகள் காயமடைந்ததாகவும் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதில் கொல்லப்பட்டவர்கள் தமது உறுப்பினர்கள் என இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு உறுதி செய்துள்ளது. தமது பிரஜைகள் மீதான எந்த ஒரு தாக்குதல் முயற்சிக்கு எதிராகவும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

## உக்ரைன் கட்டுப்பாட்டில் வந்த கியேவில் 'போரின் வடுக்கள்'



உக்ரைனிய இராணுவம், தலைநகர் கியேவ் வட்டாரத்தை அதன் கட்டுக்குள் மீண்டும் கொண்டுவந்துள்ளது. இருப்பினும் வட்டாரத்தில் போரின் வடுக்கள் ஆழமாக உள்ளன.

ரஷ்யக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த ஒரு மாதத்தில் வட்டாரத்தில் வன்முறை தொடர்ந்ததாகக் காட்டும் ஆதாரம் வெளிவந்துள்ளது. பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

காற்றில் வெடிப்பின் நாற்றம், வீதிகளில் சடலங்கள், சிதறிக் கிடக்கும் மனிதப் பாகங்களை காண முடிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு வீதியில் குறைந்தது 20 சடலங்களாவது கண்டுபிடிக்கப்பட்டதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் கூறியது. உயிரிழந்தவர்கள் சிலர் சில வாரங்களுக்கு முன்னரே இறந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

பூட்சா நகரில் 280 சடலங்கள் கூட்டாக அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. குடியிருப்பாளர்கள் சிலரின் முகங்களில் கவலை தோய்ந்துள்ளது. அண்டை வீட்டுக்காரர்கள் ரஷ்யப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அவர்கள் கூறினர்.

## புதிய கொவிட் மரபணு மாற்றம் தொடர்பில் தீவிர கண்காணிப்பு

இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் புதிய கொவிட் மரபணு மாற்றம் எக்ஸ் இ வேகமாகப் பரவி வருவதை கண்காணித்து வருவதாகவும் மக்கள் பதற்றம் அடைய வேண்டிய அவசியமில்லை என்றும் மரபணு ஆய்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஓமிக்ரோனின் திரிபு வடிவமாக இந்த புதிய வைரஸ் உள்ளது. ஓமிக்ரோனை விடவும் 10 மடங்கு வேகமாகப் பரவக்கூடியது. இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய டாடா மரபணு ஆய்வு நிறுவனத்தின் தலைவர் டொக்டர் ராகேஷ் மிஸ்ரா, ஜனவரி மாத மத்தியில் முதன் முதலாக இந்த புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் உலகளவில் இதுவரை 600 பேரை பாதித்துள்ளது என்றும் தெரிவித்தார்.



இது மேலும் ஒரு கொரோனா அலையை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு வலிமையானது என்றும் இதன் தன்மையை அறிய இன்னும் சில காலம் காத்திருக்க வேண்டும் என்றும் டொக்டர் ராகேஷ் மிஸ்ரா கூறியுள்ளார். முகக்கவசம், தடுப்பூசி பூஸ்டர் ஊசி போன்றவற்றை தொடர வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

## அமெரிக்க கடவுச்சீட்டில் பாலினக் குறிப்பு இல்லை



அமெரிக்காவில் திருநங்கைகளும் திருநம்பிகளும் கடவுச்சீட்டில் தங்களது பாலினத்தைக் குறிப்பிடுவதற்குச் சிறப்புத் தெரிவு வழங்கப்பட்டுள்ளது.

தனிநபர்கள் ஆண் அல்லது பெண் என்ற பாலினத்தை இனி குறிப்பிடத் தேவையில்லை. அவர்கள் எக்ஸ் என்று குறிப்பிடலாம்.

பிறப்புச் சான்றிதழிலோ முந்தைய அதிகாரத்துவ ஆவணங்களிலோ குறிப்பிடப்பட்டிருக்கும் அவர்களது பாலினம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்று கூறப்பட்டது.

திருநங்கைகள், திருநம்பிகள், பாலினத்திற்கு உட்படாதவர்கள் ஆகியோர் துல்லியமாகப் பாலின ரீதியாக வகைப்படுத்தப்படும் முயற்சியில் இது பெரும் முன்னேற்றம் என்று வெள்ளை மாளிகை கூறியது.

அமெரிக்காவின் போக்குவரத்துப் பாதுகாப்பு நிர்வாகம் விமானச் சேவை நிறுவனங்களிடையே அந்த நடைமுறையைச் செயல்படுத்த முயற்சி எடுப்பதாகக் கூறப்பட்டது.

## குவான்தனாமோ சிறை கைதி அல்ஜீரியாவுக்கு நாடுகடத்தல்

குவான்தனாமோ பே தடுப்பு முகாமில் கடந்த 20 ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுபியான் பர்ஹூமி, அல்ஜீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு அல்கொய்தாவின் முன்னணி உறுப்பினர் ஒருவருடன் பாகிஸ்தானில் பாதுகாப்பு விடுதி ஒன்றில் இருந்து அவர் பிடிப்பட்டார். அமெரிக்காவில் தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டதாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எனினும் அவரை தொடர்ந்தும் தடுத்து வைக்க வேண்டிய தேவை இல்லை என்று அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் கூறியுள்ளது.

அவர் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவதாக அல்ஜீரியா உத்தரவாதம் அளித்ததாக அது குறிப்பிட்டது. இந்த விடயம் தொடர்பில் அல்ஜீரியா பொது வெளியில் எதுவும் கூறவில்லை. இந்த விடுதலையுடன் குவான்தனாமோ பே தடுப்பு முகாமில் தொடர்ந்து 37 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் 18 கைதிகள் அங்கிருந்து இடமாற்ற தகுதி பெற்றுள்ளனர்.

## ஒஸ்கார் அகடமியில் இருந்து ஸ்மித் விலகல்

ஒஸ்கார் அகடமி உறுப்பினர் பதவியில் இருந்து வில் ஸ்மித் இராஜினாமா செய்துள்ளார்.

ஒஸ்கர் விருது வழங்கும் நிகழ்ச்சியின் போது வில் ஸ்மித்தின் மனைவி ஜடா பிங்கெட்டை, கிறிஸ் ரொக் கேலி செய்து பேசினார். அந்த நகைச்சுவையைக் கேட்ட வில் ஸ்மித், மேடையில் ஏறி கிறிஸ் ரொக்கை அறைந்தார்.

வில் ஸ்மித்திற்கு எதிராக "ஒழுங்கு விசாரணை" ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஒஸ்கார் அகடமி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இராஜினாமாவை அறிவித்த ஸ்மித், "நான் காயப்படுத்தியவர்களின் பட்டியல் நீளமானது, கிறிஸ், அவருடைய மனைவி, என்னுடைய அன்புக்குரிய நண்பர்கள், நிகழ்ச்சியில் இருந்தவர்கள், உலகளாவிய பார்வையாளர்கள் ஆகியோரை நான் காயப்படுத்தியுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.



அவரது விலகலை ஏற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ள ஒஸ்கார் அகடமியின் தலைவர் டேவிட் ரூபின், அவர் மீதான "ஒழுங்கு விசாரணை" தொடர்ந்து நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

## கிழக்கு உக்ரைன் மீது ரஷ்ய படை அவதானம்

கிழக்கு உக்ரைனில் குறிப்பாக இரு மிகப்பெரிய பிராந்தியங்களான லுஹன்ஸ்க் மற்றும் டொனட்ஸ்க் மீது ரஷ்யா தனது போர் நடவடிக்கைகளில் அவதானம் செலுத்தி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பகுதி தெற்கில் உள்ள மரியுபோல் நகருக்கு வெளியே இருந்து தெற்கு எல்லைவரை செல்கிறது.

இது டொன்பாஸ் என்று அழைக்கப்படும் பகுதியில் நீண்ட மோதல் ஒன்றுக்கான சமிக்ஞையை காட்டுகிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

'ரஷ்ய துருப்புகளின் இலக்கு என்ன? அவர்கள் டொன்பாஸ் மற்றும் தெற்கு உக்ரைனை கைப்பற்ற விரும்புகின்றனர்' என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி கடந்த சனிக்கிழமை இரவு ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.



உக்ரைனியப் படையினரும் கிழக்கு பக்கமாக அவதானம் செலுத்தி இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், 'எதிரிகள் கிழக்கு பக்கமாக தமது அழுத்தத்தை அதிகரிப்பதை நாம் அறிந்துள்ளோம்' என்றார் அவர்.

## கொவிட் கட்டுப்பாடு: சீனாவில் அதிருப்தி

சீனாவில் கடுமையான கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிராக பொதுமக்கள் சமூக ஊடக தளங்களில் தங்கள் விரக்தியையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.



முழுமையான முடக்கநிலை மற்றும் அடிக்கடி மற்றும் அதிக செலவு கொண்ட கொரோனா சோதனை போன்ற நடவடிக்கைகள்ல் ஏற்படும் பொருளாதார இழப்புகள் உட்பட பெரும் பாதிப்புகள் பற்றி இணையவாசிகள் முறையிட்டு வருகின்றனர் என்று உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. சீனாவில் கொவிட் தொற்றுக்கு எதிராக 20 மாகாணங்கள் மற்றும் நகரங்களில் பயணத் தடைகள் மற்றும் முடக்க நிலை அமுல்படுத்தப்படுவதால் அங்கு தொடர்ந்து நிலைமை தீவிரமாக உள்ளது.

ரமழான் சிந்தனை

## நோன்பு ஓர் அறிமுகம்

வருடத்திற்கு ஒரு தடவை நிறைவேற்றப்படும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ரமழான் நோன்பை முஸ்லிம்கள் தற்போது அடைந்து கொண்டுள்ளனர். இஸ்லாமிய வருடக்கணிப்பில் ரமழான் மாதம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை இது. நன்மை தீமைகளைப் பிரித்தறிவிக்கக்கூடிய அருள் மறையாம் அல் குர்ஆன் அருளப்பட ஆரம்பமான இம்மாதத்தில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். இதன் ஊடாக மனிதனுக்கு உடல், உள ரீதியிலும் அவனது பௌதீக, ஆன்மீக வாழ்வுக்கும் அல் குர்ஆனும் நோன்பும் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பது தெளிவாகின்றது. அதனால் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அமைய அவனது இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள்படி முஸ்லிம்கள் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.

இறைவணக்க வழிபாடுகளில் தனித்துவம் மிக்கதே ரமழான் நோன்பு. மனிதன் இவ் உலகில் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்காகவும் அவன் மீது விதியாக்கப்பட்டுள்ள மறுமை வாழ்வுக்காவும் அவனை ஏக நேரத்தில் தயார்படுத்துவதே இந்நோன்பின் இலக்காக உள்ளது. நோன்பை அதற்கேயுரிய ஒழுங்கில் நோக்கும் போது அதன் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளலாம்.

அந்த வகையில் அதிகாலை பஜ்ர் முதல் மாலை மஃரிப் வரையான காலப் பகுதியில் உணவையும் பானத்தையும் தவிர்த்தையும் உடல், உள இச்சைகளையும் கட்டுப்படுத்தியபடி, நோன்பிருந்து நிறைவேற்றப்படும் கடமை இது. அதனால், தம்மைப்படைத்து பரிபாலிப்பதோடு, தமது உலக வாழ்வுக்கு தேவையான அத்தனை வசதிவாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தந்து, தமது ஈருலக வாழ்வுக்கு தேவையான நேர்வழிகாட்டலாக விளங்கும் அல் குர்ஆனை அருளிய அல்லாஹ்வுக்காக இறைவிசுவாசிகள் இக்கடமையை நிறைவேற்றுகின்றனர். இதன் ஊடாக உடல், உள, ஆன்மீக ரீதியாகப் பக்குவம் அடைந்து கொள்ளும் மனிதன், ஈருலகிற்கும் ஏற்ப தம் வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்வான். அது அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் அடைந்து கொள்ள வழிவகுக்கும். இதனால் இவற்றை நோக்கமாகவும் இலக்காகவும் கொண்டு இக்கடமையை நிறைவேற்றுவது முஸ்லிம்களின் பொறுப்பாகும்.

மர்லின் மரிக்கார் ...

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட

# 40 ஆயிரம் மெ.தொன் டீசல் நேற்று உடனடி விநியோகம்

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய கடன் திட்டத்தின் கீழ் நேற்று நாட்டை வந்தடைந்த 40,000 மெற்றிக் தொன் டீசல் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு உடனடியாகவே விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக பெற்றோலியத் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில்,நேற்றைய தினம் கப்பலிலிருந்து டீசலை இறக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எரிபொருள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட அதேவேளை, களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திற்கும் அதன் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் நேற்றைய தினம் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்ததால் பெருமளவிலான எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. எனினும் அத்தியாவசிய சேவைகளுக்கான அனுமதி வழங்கப்பட்ட எரிபொருள் நிலையங்கள் நேற்றைய தினம் திறக்கப்பட்டு விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

06




# 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி அடுத்த வாரம் நாட்டை வந்தடையும்

### குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை

நாட்டுக்கு அடுத்த வாரம் 40,000 மெட்ரிக் தொன் அரிசி கிடைக்கவுள்ளதாகவும் அனைத்து அரிசி வகைகளையும் மக்களுக்கு குறைந்த விலையில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒரு பில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் முதலாவது தொகை அரிசி இதுவெனவும் அடுத்த வாரம் அது நாட்டுக்கு கிடைக்கும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டரிசி, சம்பா மற்றும் பச்சையரிசி என பல அரிசிவகைகள் இதில் உள்ளடங்குவதாகவும் மொத்தமாக 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அதற்கிணங்க தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி வழங்குவதன் மூலம் நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் பண்டிகைக் காலங்களில் அதற்கான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதன் விலையை மேலும் அதிகரிப்பதற்கு அரிசி வர்த்தகர்கள் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அதனை முறியடிக்கும் வகையில் அரிசியை இறக்குமதி செய்து குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசு வாணிப பன்முகப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் ஊடாக மேற்படி அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ஸ)

எம்மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்கும்

# எந்தவோர் உடன்பாட்டுக்கும் இ.தொ.கா வளைந்து போகாது

### புதிய தலைவர் செந்தில் தொண்டமான் உறுதி

"மலையகப் பெருந் தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் உன்னத வழிகாட்டலில் உருப்பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மகிமை கெடாமல், மலையக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற, அர்ப்பணிப்புடன் தொண்டாற்றுவேன்" என, இ.தொ.காவின் புதிய தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



இந்த நாட்டின் இந்திய வம்சாவளித் தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்தி, அவர்களின் அரசியல், பொருளாதார, தொழிற்சங்க உரிமைகள் மற்றும் ஏனைய நலன்புரி விடயங்களைக் காப்பதற்கான மாபெரும் ஸ்தாபனமாக உருவாக்கப்பட்ட, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், கட்சியின் பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுடனும் ஒன்றிணைந்து, எங்களுடைய பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

83 வருட வரலாற்றைக் கொண்ட "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்", 1939 ஜூலை 25ம் திகதி "இலங்கை இந்திய காங்கிரஸ்" என ஸ்தாபிக்கப்பட்டு,1950 ஆம் ஆண்டு "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்"எனும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இலங்கை அரசியலில் தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் அவர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து, பல சாதனைகளை படைத்து, உலகிலே அதிக சாதனைகளை படைத்த தொழிற்சங்கமாக இன்று வரை திகழ்கின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் உறுப்பினராக இருப்பதென்பதே பெருமைக்குரிய விடயமாக இருக்கும் நிலையில், அதன் தலைவராகச் செயற்படுவதென்பது ஒரு பாரிய பொறுப்பாகும்.

என்னை தலைவராக தேர்ந்தெடுத்த தேசிய சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்" என, இ.தொ.காவின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"இன்று நாடு இருக்கும் இக்கட்டான சூழ்நிலை மற்றும் மக்களின் பாரிய எதிர்ப்பார்ப்புகளுக்கு மத்தியில் தனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வாய்ப்பை பொறுப்புடனும் அர்ப்பணிப்புடன் ஏற்று, உரிய கடமைகளை திறம்பட நிறைவேற்றுவேன்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"மலையக மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மற்றும் பாதுகாப்பு என்ற அனைத்து உரிமைசார் விடயங்களிலும் இ.தொ.கா முன்னின்று செயற்படும்.

எம்மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்கும் எந்தவோர் உடன்பாட்டுக்கும் இ.தொ.கா வளைந்து கொடுக்காது, மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் காட்டிய வழியில் தடம் மாறாது தொடர்ந்து இ.தொ.கா பயணிக்கும் என்றும், அதன் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

LITRO GAS

முக்கிய அறிவித்தல்

அனைத்து லிற்றோ கேஸ் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு இதன் மூலம் நிறுவனம் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் நிறுவனம் புதிய தொகுதியை வெள்ளையில் பச்சை நிற நிறுவன முத்திரை பதித்த பொதியிடலை (shrink wrap) வீட்டுபாவனை எரிவாயு சிலிண்டர்களுக்கு (12.5Kg, 5kg மற்றும் 2.3Kg) 01ம் திகதி ஏப்ரல் மாதம் 2022 முதல் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அனுமதியுடன் பாவிக்க உள்ளது.

முன்னைய தொகுதி வீட்டுப்பாவனை எரிவாயு சிலிண்டர்கள் வெள்ளையில் சிவப்பு நிற நிறுவன முத்திரை பதிப்புடன் சந்தையில் உள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 02

## குறள் தரும் சிந்தனை



இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

மமதையால் பூரித்துப் போய்க் கடமைகளை மறந்திருப்பவர்கள், அப்படி மறந்து போய் அழிந்து போனவர்களை நினைத்துப் பார்த்துத் திருந்திக் கொள்ள வேண்டும்.

# பொருளாதார சவாலுக்கான தீர்வு வன்முறையும், கலவரமும் அல்ல!

கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார சவாலை உலகில் எல்லா நாடுகளும் எதிர்கொண்டுள்ளன. ஒவ்வொரு நாட்டுக்கும் அச்சவால் வெவ்வெறு மட்டங்களில் அமைந்திருக்கின்றது.

அந்த வகையில் இலங்கை எதிர்கொள்கின்ற சவால் எரிபொருள் பற்றாக்குறை ஆகும். எமது நாட்டைப் பொறுத்தவரை அது முக்கிய சவால். இந்நிலையில் கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார சவால்கள் அனைத்துக்கும் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் விரிவான அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகள் உள்நாட்டில் மாத்திரமல்லாமல் பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரதிபலன்களை உடனடியாக அடைந்து விட முடியாது. படிப்படியாகவே அதன் பலன்களை அடைய முடியும்.

இந்தியா, 'அயல் நாடு முதலில்' என்ற கொள்கைத் திட்டத்திற்கு அமைய, இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களின் தீவிரத்தைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கென பலவித உதவி, ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றது. அந்த அடிப்படையில் நேற்றுமுன்தினம் கூட 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அத்தோடு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யவும் ஏற்கனவே கடன் நிதியுதவிகளை இந்தியா வழங்கியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, இலங்கை முகம் கொடுத்திருக்கும் பொருளாதார சவாலின் தீவிரத்தன்மையைத் தணித்து வெற்றி கொள்ள உதவும் வகையில், சீனாவும் ஏனைய நட்பு நாடுகளும் கூட இந்நாட்டுக்கு உதவி ஒத்துழைப்புகளை நல்கியுள்ளன. தற்போது நாடு முகம் கொடுத்துள்ள சவால் முழு நாடுக்குமுரியது. இது தனியே ஒரு கட்சிக்கோ, பிரதேசத்திற்கோ உரியதல்ல. அதனால் கட்சி அரசியல் பேதங்கள் பாராது எல்லோரும் ஒன்றுபட்டு இச்சவாலை தணித்து வெற்றி கொள்ள முயற்சிக்க வேண்டும். அதுவே மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியாக அமையும்.

இதைவிடுத்து இப்பொருளாதார சவாலில் அற்ப அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதானது, நாட்டையும் மக்களையும் மேலும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்குள்ளும் தள்ளி விடவே வகை செய்யும். இதனை நன்கு அறிந்திருந்தும் சில சக்திகள் அவ்வாறான செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றன. அவர்களுக்கு நாட்டினதோ, மக்களினதோ நலன்கள் முக்கியமானவை அல்ல. இச்சவாலில் அற்ப அரசியல் இலாபம் தேடுவதே அவர்களது பிரதான இலக்காக விளங்குகின்றது. இதனை அவர்களது செயற்பாடுகளே வெளிப்படுத்தி நிற்கின்றன.

இது நியாயப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாத செயற்பாடாகும். கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி இரவு ஜனாதிபதியின் மிரிஹான இல்லத்திற்கு முன்பாக சிலர் வன்முறையுடன் கூடிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வன்முறையின் போது ஒரு பொலிஸ் பஸ் வண்டி, ஒரு ஜீப் வண்டி, ஒரு முச்சக்கர வண்டி, போக்குவரத்து பொலிஸாரின் இரண்டு மோட்டார் பைசிக்கிள்கள், ஒரு இராணுவ பஸ் வண்டி என்பன எரித்து சேதப்படுத்தப்பட்டன. அத்தோடு இச்சமயம் 24 பொலிஸாரும் 18 விஷேட அதிரடிப் படையினரும் காயமடைந்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரான சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண, இந்த வன்முறையுடன் கூடிய ஆர்ப்பாட்டத்தினால் 39 மில்லியன் ரூபா பெறுமதியான பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.


இவ்வாறான செயற்பாடுகள் நியாயப்படுத்தவோ அங்கீகரிக்கப்படவோ கூடியவை அல்ல. நாட்டின் பொதுச் சொத்துக்களுக்கு சேதங்களும் மக்களின் பாதுகாப்பு குந்தகமும் விளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஜனநாயக நாடு எதுவும் அங்கீகாரம் அளிக்காது.

இந்த நிலையில்தான் ஏப்ரல் முதலாம் திகதி முதல் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக நேற்று ஊரடங்கு சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. சில தீயசக்திகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களை தவறான திசையில் இட்டுச் செல்ல மேற்கொள்ளும் முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சமூக ஊடகங்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் அமைதி, சமாதானத்திற்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் குந்தகம் விளைவித்து குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவே இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே நாடு முகம் கொண்டுள்ள தற்போதைய பொருளாதார சவால்களுக்கு வன்முறை மற்றும் ஆர்ப்பாட்டங்களால் தீர்வு காண முடியாது. இதனை ஒவ்வொருவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் நாட்டு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் அரசாங்கத்தின் தலைமையில் சகலரும் ஒன்றுபட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு தேட முயற்சிக்க வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் இன்றைய தேவையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# குரும்பசிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயகுரு சிவஸ்ரீ தி. இரத்தினசாமிக் குருக்கள் அமரத்துவம்



யாழ். குரும்பசிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குருக்களும், குரும்பசிட்டி ஸ்ரீ சபரிவாசன் ஐயப்ப ஆலயத்தின் நித்திய பூசகருமான சிவஸ்ரீ தி. இரத்தினசாமிக் குருக்கள் ஐயா அவர்கள் கடந்த 01.04.2022 வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்து விட்டார்.

சிறுவயதில் இவ்வாலய மகோற்சவங்களில் பங்குகொண்ட பக்தர்களால் ஐயாவின் பிரிவை ஜீரணிக்க முடியவில்லை. மேற்படி ஆலயம் சேதமாக்கப்படுவதற்கு முன்னர் 1975களில் கொடியேற்றத் திருவிழா நடைபெற்ற வேளைகளில் எங்கள் பாட்டனாரான வெலிமடை வர்த்தகப் பிரமுகராக விளங்கிய மூளாய் நாகலிங்கம் அவர்கள் உபயகாரர் ஆவார்.

கொடியேற்றத் திருவிழாவை மாணிக்கம் ஐயா ஏற்ற, உதவிக்கு ஆறுமுகம் ஐயாவுடன் ரத்தினசாமி ஐயாவும் பக்கத்தில் இருப்பார்.

இங்கு அம்பாளின் எழுந்தருளி விக்கிரகங்கள் இரண்டு இருந்தன. ஒன்று நின்ற திருக்கோலம். மற்றையது அமர்ந்த நிலை. தேருக்கு இருக்கின்ற அம்பாளே எளுந்தருளுவார்.

தீர்த்தத் திருவிழாவன்று யாகசாலை கும்பத்தை சிரசில் ஏற்று மூலாலயத்திற்கு கொண்டுசெல்லும் ரத்தினசாமி ஐயாவின் பரவசநிலையை நேரில் தரிசித்தவர்க்கே புரியும். சைவ ஆலயங்கள் பலவற்றில் கும்பாபிஷேகம் மற்றும் விசேஷ வைபவங்களில் கலந்து சிறப்பித்த ஐயாவின் மறைவு சைவ உலகிற்கு பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஐயாவின் ஆத்மா எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரியம்பாளின் பாதாரவிந்தங்களில் சாயுச்சிய மோட்சம் அடைய பிரார்த்திக்கின்றோம்.

தங்க. முகுந்தன்
(யாழ் மாநகரசபை முன்னாள் உறுப்பினர்)
மூளாய், சுழிபுரம்

# இந்தியாவில் தினமும் உயரும் பெற்றோல், டீசல் விலைகள்!





### வாகன உரிமையாளர்கள் பாதிப்பு; அத்தியாவசிய பொருட்களும் விலையும் அதிகரிப்பு

இந்தியாவில் கடந்த 12 நாட்களில் பெட்ரோல் ரூ.7.56, டீசல் ரூ.7.61 என்றபடி விலை அதிகரித்துள்ளமை வாகன ஓட்டிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச அளவில் நிலவும் மசகு எண்ணெய் விலைக்கேற்ப, எரிபொருள் விலையை தினமும் நிர்ணயிக்கும் நடைமுறைக்கு அரசு அனுமதி அளித்தது.

இதன்படி, எண்ணெய் நிறுவனங்கள் நாள்தோறும் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை மாற்றியமைத்து வருகின்றன. இதற்கிடையில், கடந்த 137 நாட்களாக ஒரே விலையில் நீடித்த பெட்ரோல், டீசல் விலை கடந்த மார்ச் 22 ஆம் திகதி அதிகரித்தது.

அதன்படி, கடந்த 22 ஆம் திகதி ஒரு லீட்டர் பெட்ரோல் 101 ரூபா 16 காசுகளுக்கும், டீசல் 92 ரூபா 19 காசுகளுக்கும் விற்கப்பட்டது. இதன் பிறகு தொடர்ச்சியாக பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டு வருகிறது. இடையில் ஒரு சில நாட்கள் மட்டும் தவிர்த்து ஏனைய அனைத்து நாட்களும் எரிபொருள் விலை உயர்ந்து வருவது வாகன ஓட்டிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நேற்றுக் காலை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி, சென்னையில் பெட்ரோல் விலை லீட்டருக்கு 75 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி ஒரு லீட்டர் பெட்ரோல் ரூ.108.96க்கு விற்பனை செய்யப்படுகின்றது. டீசல் விலை லீட்டருக்கு 76 காசுகள் உயர்ந்து ரூ.99.04க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 12 நாட்களில் பெட்ரோல் ரூ.7.56, டீசல் ரூ.7.61 அதிகரித்துள்ளது வாகன ஓட்டிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பெட்ரோல், டீசல் தொடர்ந்து விலையேறி வருவதால், அத்தியாவாசிய பொருட்களின் விலையும் தங்களின் பயணச் செலவும் ஒருசேர அதிகரிப்பதாக மக்கள் வேதனையுடன் கூறி வருவதைப் பார்க்க முடிந்தது.

# 'கணேஷ் கோயில் தெரு' எனப் பெயரிட்டு இந்துக்களை கௌரவித்துள்ள அமெரிக்கா






அமெரிக்காவில் இந்து மக்களை கௌரவிக்கும் வகையில் வீதியொன்றுக்கு 'கணேஷ் கோயில் தெரு' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இச்செயலானது அப்பகுதி மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் வடமத்திய பகுதியில் குயூன்ஸ்7 கம்யூனிட்டி மாவட்ட பிளஷ்சிங் நகரில் ஹோலி அவன்யூ, 45 ஆவது அவன்யூ இடையில் அமைந்துள்ளது பௌனி தெரு.

இந்தப் பகுதியின் சுற்றுப் பகுதியில் கொரியா, தாய்வான் மற்றும் இந்திய கலாசார மையங்கள், வர்த்தக நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன.

இங்கு 'வல்லப கணபதி தேவஸ்தானம்' என்ற பெயரில் ஒரு கோயிலும் உள்ளது. இங்கு பக்தர்கள் பலர் வந்து தரிசனம் செய்து வருகின்றனர். முக்கிய திருவிழாக்களில் அமெரிக்க வாழ் இந்து பக்தர்கள் அதிகம் கூடுவர். இந்நிலையில் இந்துக்களை கௌரவிக்கும் வகையில் அமெரிக்கா , இந்த பௌனி தெருவுக்கு 'கணேஷ் கோயில்' என்று பெயரை மாற்றி முறையான தகவல் பலகையும் அமைத்துள்ளது. இந்த பெயர் மாற்றம் தொடர்பாக நியூயோர்க் சிட்டி கவுன்சில் உறுப்பினர் பீட்டர் ஏ. கூ. தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கவுன்சில் மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இத்தகவலை அவரே சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதனை வடஅமெரிக்காவின் 'இந்து டெம்பிள் சொஷைட்டியும்' உறுதி செய்துள்ளது.

முறைப்படி அங்கீகரிக்கப்பட்டவுடன் சிட்டி கவுன்சில் வரைபடத்திலும் இந்த கணேஷ் கோயில் தெரு பெயர் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# அட்டாளைச்சேனை குப்பை மேட்டிலிருந்து தயாரான 4,40,000 கிலோ சேதனப் பசளை







அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை அஷ்ரப் நகர் பகுதியிலுள்ள பாரிய குப்பை மேட்டிலிருந்து தயாரிக்கப்பட்ட 04 இலட்சத்து 40 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளையை தேசிய உர செயகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

குப்பைமேடு அமைந்துள்ள வளாகத்தில் இயங்கும் பசளை தயாரிக்கும் தொழிற்சாலையில் வைத்து, தேசிய உர செயலகத்தின் அம்பாறை மாவட்டத்துக்கான மேலதிகப் பணிப்பாளர் ஏ.எம். பிரியந்த பண்டாரவிடம், பசளையைத் தயாரித்து வரும் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் அருண கடுருபொகுண மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா ஆகியோர் இணைந்து இந்தப் பசளையை வழங்கி வைத்தனர்.

அஷ்ரப் நகர் பகுதியில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிருவாகத்தின் கீழுள்ள 09 ஏக்கர் இடப்பரப்பில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு உள்ளூராட்சி சபை பிரதேசங்களிலுமிருந்து சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

கல்முனை, அக்கரைப்பற்று மாநகர சபைப் பிரதேசங்கள் மற்றும் காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, அட்டாளைச்சேனை பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் இங்கு கொட்டப்படுகின்றன.

இதற்காக, அட்டாளைச்சேனை பிரதேச சபை ஒரு தொன் குப்பைக்கு 250 ரூபா வீதம் அறவிடுகின்றது. தினமும் இங்கு சுமார் 150 தொன் குப்பைகள் கொட்டப்படுவதாக, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா தெரிவிக்கின்றார்.

இங்கு கொட்டப்படும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரிப்பதற்காக, அந்த வளாகத்தில் 220 மில்லியன் ரூபா செலவில் தொழிற்சாலையொன்றினை, அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு அரசு அமைத்துக் கொடுத்தது.

இந்த நிலையில், இங்கு கொட்டப்படும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் பொருட்டு, இந்த தொழிற்சாலையினை கடந்த வருடம், தனியார் நிறுவனமொன்றுக்கு அட்டாளைச்சேனை பிரதேச சபை வாடகை அடிப்படையில் வழங்கியது.

இதனடிப்படையில் இங்கு தயாரிக்கப்பட்ட 04 இலட்சத்து 40 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளை தேசிய உர செயலகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ. கமல் நெத்மினி உள்ளிட்ட மேலும் சிலரும் கலந்து கொண்டனர்.

ரிசாத் ஏ. காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அருள் மிகு மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப்பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை 06.04.2022இல் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

கும்பாபிஷேக பிரதமகுருவாக ஆலய பிரதம குருவும் கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியாரியாருமான சிவாகம வித்யாபூஷணம் சிவாச்சார்ய திலகம் பிரதிஸ்டாதிலகம் ஜோதிடவித்யாதத்துவ நிதி விபுலமணி சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் செயற்படுகிறார்.





2ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு கர்மாரம்பத்துடன் கிரியைகள் யாவும் ஆரம்பமாகின. எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இன்று திங்கள்(4) காலை 8மணி முதல் நாளை செவ்வாய்க்கிழமை(5) பி.ப.3மணிவரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எண்ணெய்யை ஆலயத்தில் விநியோகிக்க பரிபாலனசபை ஏற்பாடு செய்துள்ளது என ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தெரிவிக்கிறார். நாளை 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு நிறைவுற்றகையோடு பி.பகல் 4 மணியளவில் ஆலய முன்றலில் 1மணிநேர சூரசம்ஹாரம் காத்தவராயன் ஆகிய இரு வடமோடி நாட்டுக்கூத்துகள் நடைபெறவுள்ளன. மறுநாள் மஹா கும்பாபிஷேகம் 6ஆம் திகதி புதன்;கிழமை காலை 9.12மணிமுதல் 10.27மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெற அருள்பாலித்துள்ளது. ஆலயகுரு சிவஸ்ரீ ச.ஹோவர்த்தன சர்மா ஒழுங்கமைப்பில் சர்வசாதகராக ஆரியபாஷா விற்பன்னர் சிவஸ்ரீ சண்முக மயூரவதனக்குருக்களும் பிரதிஸ்டா குருவாக கிரியாஜோதி சிவஸ்ரீ வே.யோகராசாக்குருக்களும் செயற்பட மகேஸ்வரபூஜையை கோ.ஜனபாலச்சந்திரன் (அவுஸ்திரேலியா) வழங்கவுள்ளார். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24தினங்கள் மண்டலாபிசேக பூஜைகள் இடம்பெறுமென ஆலய நிருவாக சபையினர் தெரிவித்தனர்..

**அமைவிடம்**

இலங்கையில் இருக்கும் ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயமான அம்பாறை மாவட்ட நிந்தவூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மருத நில சூழலில்; எழுந்தருளி மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம் சுமார் 500 வருடங்களாக அருள் பாலித்துக் கொண்டிருக்கிறது.

சுற்றவர பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளுக்கு மத்தியில் ஆலமரம், அரசமரம், மாமரம், கமுகு, வில்வை மரம், தென்னை மரங்கள் நிறையப்பெற்ற ஒரு மனோரம்மியமான தண்மையான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளதும் சிறப்புத்தான். அங்கு சென்றவர்கள் உடனே திரும்பமுடியாதளவிற்கு அந்த சூழல் பக்தர்களை சுண்டி ஈர்க்கிறது. காஞ்சியில் காமாட்சி காசியில் விசாலாட்சி மதுரையில் மீனாட்சி மடத்தடியில் மீனாட்சி என்பார்கள்.

**ஆலய வரலாறு**

போத்துக்கீசர் காலத்தில் அதாவது 15ஆம் நூற்றாண்டு காலத்தில் 1624 காலப்பகுதியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அக்காலத்தில் சிற்சில பிராந்தியங்களி;ல் வன்னிமையின் சிற்றாட்சி நிலவியது.

மட்டக்களப்பில் மண்முனைப்பற்று வன்னிமைகளான அம்பிளாந்துறை கந்தப்போடி சத்துருக்கப்போடி கதிரமலைப்போடி அறுமக்குட்டிபோடி ஆகியோரின் கண்காணிப்பில் சில ஆலயங்கள் பரிபாலிக்கப்பட்டு வந்தன. அதேபோல் மட்டக்களப்பின் தெற்கே நற்பிட்டிமுனையில் வாழ்ந்த கரவாகுப்பற்று வன்னிமைகளான சின்னத்தம்பி செல்லையா வன்னிமையின் கண்காணிப்பில் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன்ஆலயம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் நற்பிட்டிமுனை மாணிக்கப்பிள்ளையார் சேனைக்குடியிருப்பு பத்ரகாளியம்பாள் ஆலயம் என 5ஆலயங்கள் பரிபாலிக்கப்பட்டுவந்தன.

அதேபோன்று அட்டப்பள்ளத்தை மையமாகக் கொண்டு நிந்தவூர் பற்று வன்னிமையான சிங்காரபுரி வன்னிமை ஆட்சி நிலவியது. சிங்காரபுரித் தோட்டத்தில்இருந்துஅந்தக்காலத்தில்அட்டப்பள்ளம் தொடக்கம் காரைதீவு வரையான பிரதேசத்தை பூபாலகோத்திரத்து வன்னிமை பரிபாலனம் செய்து வந்தான். அதனை சிங்காரத்தோப்பு எனக்கூறுவர். அங்கிருந்து வன்னிமை யானை மீதேறி அப்பிரதேசமெங்கும் வலம்வருவது வழமை.ஒரு தடவை காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு யானையில் வந்து வணங்கியபோது இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் கண்பார்வையை இழந்த தனது மனைவிக்கு அம்மனின் அருளால் கண்பார்வை கிடைத்தமைக்காக காணிவழங்கிய நிகழ்வும் நடந்தேறியிருக்கிறது.அதனை கண்கண்டவெளி என்று பெயரிட்டனர்.

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா...
ஆலய அறங்காவலர்சபை ஆலோசகர்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### சிவகோசரியார்



67

நம்முடைய முடியின்மேல் உன்னாலே சாத்தப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்படி நம்முடைய குமாரனாகிய சுப்பிரமணியனுடைய காலினும் பார்க்க நமக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் தன் வாயினால் நம்மேல் உமிழுகின்ற ஜலமானது, அன்புமயமாகிய அவனுடைய தேகமென்னும் கொள்கலத்தினின்றும் ஒழுகுகின்ற படியால்; கங்கை முதலாகிய புண்ணிய தீர்த்தங்களைப் பார்க்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் தன்னுடைய தலைமயிரிலே செருகிக்கொண்டு வந்து நமக்குச் சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானது விரிந்து விழுதல்போல விழுதலால், பிரம விஷ்ணு முதலாகிய தேவர்கள் நமக்குச் சாத்தும் புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம்.

அவன் நமக்குப் படைக்கின்ற மாமிசம், பதமாக வெந்திருக்கின்றதோ என்று அன்பினால் உருகி இளகிய மனசினோடும் மென்று, சுவைபார்த்துப் படைக்கப் பட்டபடியால், வேதவிதிப்படி யாகம் செய்கின்றவர்கள் தரும் அவியிலும் பார்க்க நமக்கு அதிக மதுரமாயிருக்கின்றது. அவன் நம்முடைய சந்நிதனத்தில் நின்று சொல்லும் சொற்கள், நிஷ்களங்கமாகிய அன்பினோடும் நம்மையன்றி மற்றொருவரையும் அறியாது வெளிப்படுதலால், வேதங்களும் மகாமுனிவர்கள் மகிழ்ந்து செய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எல்லாவற்றிலும் பார்க்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினால் ஆகிய செய்கைகளை உனக்குக் காட்டுவோம். நீ நாளைக்கு நமக்குப் பிற்பக்கத்திலே ஒளிந்திருந்து பார்" என்று சொல்லி மறைந்தருளினார்.

சிவகோசரியார் சொப்பனாவத்தையை நீங்கிச் சாக்கிராவத்தையை யடைந்து, பரமசிவன் தமக்கு அருளிச்செய்த திருவார்த்தகளை நினைந்து நினைந்து, "அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவர் குலத்திலே பிறந்த அவருக்கு வேதாகமாதி சாஸ்திரங்களிலே மகாபாண்டித்தியமுடைய மகாமுனிவர்கள் தேவர்களிடத்திலும் காணப்படாத உயர்வொப்பில்லாத இவ்வளவு பேரன்பு வந்தது, ஐயையோ! எவ்வளவு அருமை அருமை" என்று ஆச்சரியமும், "இப்படிப்பட்ட பேரன்பர் செய்த அன்பின் செய்கைகளைப் புழுத்தநாயினும் கடையனாகிய பாவியேன் அநுசிதம் என்று நினைந்தேனே! ஐயையோ? இது என்ன கொடுமை" என்று அச்சமும் அடைந்து, வைகறையிலே போய்ப் பொன்முகலியாற்றிலே ஸ்நானம் பண்ணி மலையில் ஏறி, முன்போலச் சுவாமியை அருச்சித்து, அவருக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்தார்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

# கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலய பிரமோற்சவம்



மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தின் பிரமோற்சவம், கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையின் மிக உயரமான சுதை விக்கிரக 64 அடி உயர இராஜகோபுரத்தினையுடைய மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் பிரமோற்வசவம் எதிர் வரும் 07.04.2021 திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. அன்று செட்டிபாளையம் ஸ்ரீ நித்தியானந்த சிவசுப்ரமணியர் ஆலயத்தில் இருந்து கொடியேற்றத்துக்கான கொடிசீலை எடுத்து வரும் பவனியை தொடர்ந்து காலை 11.30 மணியளவில் கொடியேற்றம் இடம் பெறும். அன்று மாலை விசேட யாகாரம்பம் மூலமூர்த்தி அலங்கரபூஜை தம்ப பூஜை வசந்த மண்டப அலங்காரபூஜை சுவாமி உள்வீதி வெளி வீதி வருதல் ஆகியன இடம் பெறும். திருவிழா காலங்களில் போது பிள்ளையார், சிவன்பார்வதி, விஷ்ணு, வள்ளி தெய்வானை சமமேத முருகபெருமான் மற்றும் சண்டஸ்வர் ஆகிய பஞ்ச மூர்த்திகள் திருவிழா காலங்களில் பவனி வருகை தொடச்சியாக பத்து தினங்கள் இடம் பெறவுள்ளது.

பிரமோற்வசவ திருவிழா காலங்களில் புஸ்பாஞ்சலி திருவிழா, கர்ப்பூரஜோதித் திருவிழா, அடியார்கள் கர்ப்பூர சட்டி ஏந்தல், சதுர்வேத கோஷத் திருவிழா, பஞ்சமுக அர்ச்சனை திருவிழா என்பன இடம்பெறும்/ இங்கு அடியார்கள் தங்கள் நட்சத்திரங்களுக்கு அர்ச்சனை செய்யலாம், திராவிடதோத்திர விழாவும் மாம்பழத்திருவிழாவும், வேட்டைத்திருவிழா( தேற்றாத்தீவு வட பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது. சப்பரத்திரு விழாவும் இடம் பெற்று பத்தாம் நாளாகிய சித்திரா பௌணமியன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும். தீர்த்தோற்சவத்தின் போது அடியார்கள் பிதிர்கடன் செய்யக்கூடிய வாய்ப்பும் உள்ளது. அன்றைய தினம் மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. மேலும் பூங்காவன திருவிழா மற்றும் பைரவர் பூஜையும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபை தலைவர் த. விமலானந்தராஜா தெரிவித்தார்.

செல்வா ஸிந்து...

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**18946) ராமரின் அருளால் சாபம் நீங்கப்பெற்றவள் யார்?**
அகல்யை

**18947) ராமனுக்கு போர்க்களத்தில் ஆதித்ய ஹ்ருதயம் உபதேசித்த மாமுனிவர் யார்?**
அகத்தியர்

**18948) ராவணனிடம் ராமனைப் பற்றி கோள்சொன்னவன் யார்?**
அகம்பனன்

**18949) ராமனின் அம்புக்கு தப்பிப்பிழைத்த அதிசய ராட்சஷன் யார்?** அகம்பனன்

**18950) வாலி, தாரையின் மகன் யார்?** அகம்பனன்

**18951) கிஷ்கிந்தையின் இளவரசன் யார்?** அங்கதன்

**18952) அனுசூயா என்ற பத்தினியின் கணவர் யார்?** அங்கதன்

**18953) ராம தரிசனம் பெற்றவர் யார்?** அத்திரி

**18954) ராவணனின் மகன் யார்?**
இந்திரஜித்

**18955) லட்சுமணனால் அழிந்தவன்.** இந்திரஜித்

**18956) மேகநாதன் என்ற பெயரையும் உடையவன்**
இந்திரஜித்

**18957) ராவணனின் தம்பிகள் யார்?** கரன், தூஷணன்

**18958) ராமனின் கையால் அழிந்தவர்கள் யார்?**
கரன், தூஷணன்

**18959) ஜனஸ்தானம் என்ற இடத்திற்கு அதிபதிகள் யார்?**
கரன், தூஷணன்

**18960) தலையும் காலும் இல்லாத அரக்கன் யார்?**
கபந்தன்

**18961) ராமனால் வதைக்கப்பட்டவன் யார்?** கபந்தன்

**18962) கந்தர்வ வடிவம் பெற்றவர்கள் யார்?**
ராம லட்சமணர்கள்

**18963) கந்தர்வ வடிவம் பெற்று ராம லட்சமணர்கள் கிஷ்கிந்தை செல்ல வழி காட்டியவன் யார்?**
கபந்தன்

**18964) வேடர் தலைவன், படகோட்டி, ராமரால், சகோதரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன் யார்?**
குகன்

**18965) ராவணனின் தம்பி, ஆறு மாதங்கள் சாப்பிட்டும், மீதமுள்ள ஆறுமாதங்கள் பெரும் தூக்கம் தூங்கியே பொழுதை கழிப்பவன் யார்?** கும்பகர்ணன்

**18966) கும்பகர்ணனின் மகன் யார்?** கும்பன்

**18967) ஜனகரின் தம்பி யார்?**
குசத்வஜன்

**18968) மாண்டவி, சுருதகீர்த்தி ஆகியோரின் தந்தை யார்?**
குசத்வஜன்

**18969) பரத சத்ருக்கனின் மாமனார் யார்?** குசத்வஜன்

**18970) கவுசல்யா யார்?**
தசரதரின் பட்டத்தரசியரில் ஒருவர்

**18971) கைகேயி யார்?**
தசரதரின் பட்டத்தரசியரில் ஒருவர்

**18972) சுமித்திரை யார்?**
தசரதரின் பட்டத்தரசியரில் ஒருவர்

## நாதப் பிரம்ம யோகம் - 13



அக ஞானத்தினைப் பெறுவதற்கான சாதனையினை இசையின் மூலம் சாதிக்க முடியும். ஆன்ம விழிப்பினை நோக்கி ஸ்வரங்களை பயன்படுத்தி பரப்பிரம்மத்தை அடையும் வழிமுறைகள் மிகச் சிறந்த முறையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தான் எல்லா சாதனை, உபாசனா, சடங்குகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஸ்வரங்களைப் பயன்படுத்துகிறது. மந்திரங்கள் சந்தஸில் அமைவதற்கு காரணம் ஸ்வரங்களில் அவற்றை அமைத்துப் பாடுவதற்கே. த்ருஷ்டுப், அனுஷ்டுப், காயத்ரி போன்ற சந்தஸ்களும், ரிஷிகளின் பெயர்களும், தேவதைகளின் பெயர்களும் ஒவ்வொருவே தமந்திரங்களுக்கும் தரப்பட்டிருக்கிறது. இந்த சந்தஸின் வகைகள் மந்திரங்களை எப்படி ஒத்திசைந்து, ஏற்ற இறக்கத்துடன் எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதைக் குறிப்பது. ஒரு குறிப்பிட்ட அதிர்வெண் எப்படி ரேடியோவில் பெறப்படுகிறதோ அதைப் போல் தியானத்தில் மந்திரங்கள் குறித்த அலைவரிசையில் தேவதையின் சக்தியைப் பெற உபயோகமாகிறது. இதைப் பற்றிக் வேதம் (9|85|3) இப்படிக் குறிப்பிடுகிறது.

'பிரபஞ்சத்தை ஆளும் அந்த இறைவனை பல அனுபவமுடைய ஞானிகள் இசையின் ஸ்வரங்கள் ஊடாகவே அழைத்து தொடர்பினை ஏற்படுத்துகிறார்கள்'

சாதாரண மக்களிற்கு ஞானயோகம், கர்மயோகம் என்பவை மிகக் கடினமான சாதனைகளாகும். பக்தியோகம் என்பது இதயத்தின் உணர்வுகளான பக்தி, அன்பு, கருணை, காதல் என்பவற்றின் அடிப் படைகளை வைத்து உருவாகப்பட்ட ஒரு முறையாகும். இந்த முறையில் துரிதமாக தெய்வீக உணர்வினைப் பெறலாம். இசையானது மெல்லிய உணர்வினைத் தூண்டி பக்தியோகத்திற்கு தேவையான உணர்ச்சிகளை உருவாக்க உதவிசெய்கிறது. இதுபற்றி யரிக் வேதமந்திரம் (8|32|2) இப்படிச் சொல்கிறது.

'ஓ மாணவனே நீ உனது ஆன்ம முன்னேற்றம் வேண்டி இங்குவந்திருக்கிறாய், நான் உனக்கு இறைவனை அடையும் வழியினைக் கூறுகிறேன். நீ இறைவனை இதயத்தின் மூலம் பக்தியுடன் இசையால் அழைத்தால், இறைவன் உனது உணர்ச்சிகளின் அடியாழத்தில் இதயத்தில் தோன்றுவான். '

பிரம்மாவின் ஆனந்தமயமான இதயம் இசையினால் மகிழ்விக்கப்படுகிறது. இந்தநிலையில் அவரிலிருந்து காயத்ரி எனும் பரிணாமத்தை தூண்டும் அதிர்வு வெளிப்பட்டு பிரபஞ்சத்தை உருவாக்கியது என்று புராணங்களில் உள்ள ஒரு செய்தி கூறுகிறது.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்









உடப்பு ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருஷாபிஷேம், மற்றும் சுவாமி வீதி வலம் வருதல் செவ்வாய்க்கிழமை(29) இடம்பெற்றது.
(படம்: உடப்பு குறூப் நிருபர்)

# இன்று முதல் நான்கு மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை

## கல்வியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாடசாலை மாணவர்களுக்கு இன்று (04) முதல் விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா நேற்று தெரிவித்தார்.

எவ்வாறாயினும், குறித்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் சேவைக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மாத்திரம் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டுள்ளார்.






ரி.எல். ஜவ்பர்கானை பிரதம ஆசிரியராக கொண்டு கிழக்கு மாகாணத்திலிருந்து வெளிவரும் வார இறுதி பத்திரிகையான "வாரவலம்" நேற்றுமுன்தினம் சர்வமத தலைவர்களின் வாழ்த்துக்களுடன் வெளிவந்தது. மட்டு, அம்பாறை மறை மாவட்ட ஆயர், மட்டு.இராமகிருஸ்ண மிசன் தலைவர், காத்தான்குடி முஸ்லிம் சம்மேளன தலைவர், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அமைப்பாளர், கவிஞர்கள், இலக்கியவாதிகள் முன்னிலையில் தொழிலதிபர் மீராசாஹிபு முதல் பிரதிபெற்றவேளை..

# தவக்கால சிந்தனை



## இயேசு வழங்கும் மீட்பு

"இருள் சூழ் பள்ளத்தாக்கில் நடக்க நேர்ந்தாலும் நான் எதற்கும் அஞ்சிடேன்."(தி.பா.23:123 )

அக்காலத்தில் இயேசு மக்களைப் பார்த்து "உலகின் ஒளி நானே. என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியை கொண்டிருப்பார்" என்றார்.

பரிசேயர் அவரிடம் உம்மைப் பற்றி நீரே சான்று பகிர்கின்றீர் உம் சான்று செல்லாது என்றனர்.

அதற்கு இயேசு என்னைப் பற்றி நானே சான்று பகர்ந்தாலும் என் சான்று செல்லும். ஏனெனில் நான் எங்கிருந்து வந்தேன் எங்கு செல்கிறேன் என்பது எனக்குத் தெரியும். நான் எங்கிருந்து வருகிறேன் எங்கு செல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது.

நீங்கள் உலக போக்கின்படி தீர்ப்பு அளிக்கிறீர்கள். நான் யாருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை. ஆனால் நான் தீர்ப்பு வழங்கினால் அத்தீர்ப்பு செல்லும். ஏனெனில் நான் தனியாக தீர்ப்பு வழங்குவதில்லை. என்னை அனுப்பிய தந்தையும் என்னோடு இருக்கிறார்.இருவருடைய சான்றும் செல்லும் என்று உங்கள் சட்டத்தில் எழுதியுள்ளது அல்லவா! என்னைப் பற்றி நானும் சான்று செய்கிறேன்.

என்னை அனுப்பிய தந்தையும் சான்று பகர்கின்றார் என்றார்.

எல்லா காலத்திலும் வாழ்ந்த மக்கள் அவர்கள் தமது மீட்பைக் கண்டடைய பழைய ஏற்பாட்டு காலத்தில் பகலில் மேகத்தூண் மற்றும் இரவில் நெருப்புத் தூணின் வழியாக தம் மக்களை பாலை நிலத்தில் வழிநடத்திய கடவுள் தற்போது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தன் ஒரே மகன் வழியாக வழிநடத்துகிறார்.

இயேசுவைப் பின்பற்றும் எவரும் தீமையால் ஈர்க்கப்பட மாட்டார்கள்.

அந்த வகையில் இயேசுவின் போதனைகளின் படி நாம் வாழ்ந்தால் பழைய ஏற்பாட்டு மக்களைப் போன்று நாமும் அவரது மீட்பைக் காண்போம்.

இன்று நாம் பல்வேறு விதத்திலும் வழி நடத்தப்படுகின்றோம். எது சரியான வழி எது தவறான வழி, எங்களை வழிநடத்துபவர்களில் யார் எங்களை சரியான வழியில் வழி நடத்துகிறார்கள் என்பதில் நாம் தெளிவில்லாமல் காணப்படுகின்றோம்.

இயேசுவின் மீது நம்பிக்கையை வைத்து,அவரது வழியில் பயணித்து, அவரது போதனைகளை எமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால் நாமும் மீட்பை பெற்றுக்கொள்வோம்.அதனை இந்தத் தவக்காலத்தில் நாம் சிந்திப்போம். இக்காலத்தில் கடவுளுடைய மீட்பு பற்றி மற்றவர்களுக்கும் அறிவிப்போம். அவ்வாறான வாழ்க்கையை நாம் தொடர்வதற்கு இறை அருள்வேண்டி செபிப்போம்.

எல்.செல்வா...

## ஊரடங்கு உத்தரவை...

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் எந்தவொரு பொது வீதி, பூங்கா, மைதானங்கள், புகையிரத வீதிகள், கடற்பரப்புக்கள் போன்ற பொது இடங்களில் மக்கள் நடமாடுவதைத் தடை செய்யும் விசேட வர்த்தமானி நேற்றுமுன்தினம் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 40 ஆயிரம் மெ.தொன் டீசல்... 

(03ஆம் பக்கம் பார்க்க)

அந்த எரிபொருள் நிலையங்களுக்கு நேற்று எரிபொருள் விநியோகிக்கப் பட்டதாக தெரிவித்த அவர் நேற்றைய தினம் அவ்வாறு திறக்கப்பட்டிருந்த எரிபொருள் நிலையங்களின் விபரங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணையத் தளத்தில் பதிவிடப் பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். (ஸ)

## புனித ரமழான் ...

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டதையடுத்து ரமழான் மாதம் ஆரம்பமாவதாக பிறைக்குழு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. கொவிட் சுகாதார வழிமுறைகள் மற்றும் ஊரடங்குச்சட்டம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானோர்களின் பங்கேற்பில் இந்த மாநாடு இடம்பெற்றது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

## சமூக வலைத்தள...

உருவாக்காமல், பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சர் ட்விட்டர் பதிவின் மூலம் கோரியுள்ளார்.

சமூக ஊடகங்களை முடக்கும் முடிவை அதிகாரிகள் மீள்பரிசீலனை செய்யவேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

சமூக ஊடங்களை முடக்குவதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

விபிஎன் கிடைப்பது – தற்போது நான் பயன்படுத்துவதுபோலஅவ்வாறான தடைகளை முற்றாக அர்த்தமற்றதாக்கிவிடுகின்றது.

அதிகாரிகள் மேலும் முற்போக்கான விதத்தில் சிந்திக்க வேண்டும்.

சமூகஊடகங்களை முடக்கும் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என நான் வலியுறுத்துகின்றேன், என தெரிவித்துள்ளார்.

## ஊரடங்கு சட்டத்தை மீறி...

தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்று (03) கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் சுதந்திர சதுக்கத்திற்குள் நுழைய முயற்சித்த போதிலும் பாதுகாப்புப் படையினர் அதற்கு அனுமதிக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஒன்றுகூடிய அவர்கள் நேற்று காலை 11 மணியளவில் 'தாமரைத் தடாகம்' கலையரங்கிற்கு அருகில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திர சதுக்கத்திற்கு பேரணியாகச் சென்றனர்.

எனினும், அவர்கள் சுதந்திர சதுக்கத்தை நெருங்கமுன்னர் பாதை முற்றாக மூடப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திர சதுக்கத்திற்குள் நுழைய முற்பட்ட போதும் பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லை.

## பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைப்பு...

எதிரானது எனக்கூறி தீர்மானத்தை சபாநாயகர் நிராகரித்தார்.

இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அந்நாட்டு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறியதாவது:

துணை சபாநாயகரின் முடிவை ஒவ்வொரு பாகிஸ்தானியரும் வரவேற்றுள்ளனர். நம்பிக்கையில்லா தீர்மானம் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான வெளிநாட்டு சதியாகும். நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிராகரிக்கும் முடிவு சரியானதே.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும். பாராளுமன்றத்தை கலைத்து விட்டு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும்.

பாகிஸ்தான் மக்கள் தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

பாகிஸ்தானை யார் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், இம்ரான் கானின் பரிந்துரையை ஏற்று பாராளுமன்றத்தை கலைத்து பாகிஸ்தான் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## இலங்கையை...

இதையடுத்து, இலங்கைக்கு இந்தியா 10 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாக அறிவித்தது. இதன் ஒரு பகுதியாக 40,000 மெற்றிக் தொன் டீசல் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அக்கப்பல் நேற்று இலங்கை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தியா அனுப்பிய டீசல் இன்று இரவு இலங்கை முழுவதும் விநியோகிக்கப்படும் என தெரியவருகிறது.

## ஊரடங்குச் சட்டம்...

அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் கருத்து சுதந்திரம், பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என குறிப்பிடப்பட்டுள்ளது.

பேச்சு சுதந்திரம் , கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடி போராட்டம் நடத்தும் உரிமை உள்ளிட்ட பொது மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் இந்த விடயங்கள் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கையிருப்பிலுள்ள...

கொவிட் தடுப்பூசிகள் காலாவதியாகும் என சுட்டிக்காட்டிய அவர் ,எனவே, அதற்கு முன்னதாக பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் உடன் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 90 வீதமானவர்கள் ஒரு தடுப்பூசியேனும் ஏற்றிக்கொண்டுள்ளனர். இரண்டாவது தடுப்பூசியை ஏற்றிக் கொண்டவர்களின் எண்ணிக்கை 75 வீதமாக காணப்படுகின்றது.

எனினும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 55 வீதமானவர்கள் என தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நாளாந்த தொற்று உறுதியாளர் எண்ணிக்கை 200 என்ற அளவில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தடுப்பூசி ஏற்றிக் கொள்ளல் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுதல் ஆகிய காரணிகளினால் தொற்று உறுதியாளர் எண்ணிக்கையை குறைந்தளவில் பேண முடிந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்திலும் இந்த நிலைமையை பேணினால் தொற்று உறுதியாளர் எண்ணிக்கை அதிகரிப்பினை வரையறுக்க முடியும் என டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## அமைச்சு பதவிகளை...

பங்காளிக்கட்சியாக இருந்தாலும், மக்களை பாதுகாப்பதே எமது முதன்மை நோக்கமாகும்.

அந்தவகையில் ஜனாதிபதியின் வீட்டுக்கு செல்லும் மிரிஹான வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் மக்கள் மீது நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தவறான செயலாகும். என்னதான் வதந்திகள் பரவினாலும், முறையான விசாரணையின்றி மக்களை கைது செய்து, துன்புறுத்துவது நியாயம் அல்ல.

மரிஹான போராட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையும் கண்டிக்கின்றோம். அது நியாயமற்ற செயலாகும். மக்களுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசுக்கு எமது எதிர்ப்பை காட்டிவிட்டோம். சர்வக்கட்சி மாநாட்டை புறக்கணித்தோம். ஆனால் அமைச்சு பதவி கிடைக்கவில்லை என்பதால் தான் இ.தொ.கா. இப்படி செயற்பட்டது என சிலர் வதந்தி பரப்பினர்.

இராணுவத்துக்காக 10 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழகம் அமையவுள்ள இடமும் உள்ளடங்குகின்றது. இதனை நாம் எதிர்த்தோம்.

நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு சார்பான முடிவையே நாம் எடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல்போனால் அரசிலிருந்து காங்கிரஸ் வெளியேறும். இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும்" என்றார்.

## சூழ்நிலைகேற்ப....

மின்வெட்டு, உணவுத்தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களால் பொது மக்கள் ஆட்சியார்களின் அலுவலகங்கள், இல்லங்களை சுற்றிவளைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த நாட்டில் தற்போது அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை கவனத்தில் கொண்டு மிகவும் நிதானமாகவும் பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும்.

விசேடமாக இளைஞர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி நடந்து கொள்வது மிகமிக அவசியமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை நீங்கி மீண்டும் இந்நாடு மீள் எழுச்சிபெற்று அபிவிருத்தி காண சகல இன மக்களோடும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுடன் இந்தப் புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் அதிகளவு பிரார்த்தனைகளிலும் வணக்கவழிபாடுகளிலும் ஈடுபடுதல் அவசியமாகும் என்று அவர் இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின் துண்டிப்பு...

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய நேற்று (03) முதல் மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக மின்சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மக்கள் படும் இன்னல்கள் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

மேலும், மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, திட்டமிடப்பட்ட 6 மணி நேர மின்வெட்டு ஒரு மணி நேரத்திற்கு 40 நிமிடங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு, உரிய அதிகாரிகளுக்கு பிரதமர் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார்.

இதன்படி அடுத்த சில நாட்களுக்குள் நாடு படிப்படியாக மீளும் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## இடைக்கால அரசாங்கத்தை...

பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு வெள்ளிக்கிழமை (01) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சி தலைமையகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு கூடியது. இதன் போதே மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மத்திய குழு கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

'நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரங்களின் அடிப்படையில் சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் மூலம் அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியதன் பின்னர் மீண்டும் கூடி பல முக்கிய தீர்மானங்களை எடுக்கவுள்ளோம் ' என தெரிவித்தார்.

பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவிக்கையில், 'இதற்கு முன்னர் பல காரணிகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதோடு 15 முக்கிய யோசனைகளையும் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

அவை தவிர சர்வகட்சி மாநாட்டில் 22 யோசனைகளையும் முன்வைத்துள்ளோம். ஆனால் அரசாங்கம் அவை தொடர்பில் இதுவரையில் எவ்வித சாதகமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

எனவே தான் தற்போதுள்ள நிலைமைகளில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது அத்தியாவசியமானது என்ற தீர்மானம் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

அத்தோடு எமது பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தவறினால் நாம் அமைச்சுப்பதவிகளிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படுவதா அல்லது எதிர் எதிர்தரப்பிலிருந்து செயற்படுவதா என்பது பின்னர் தீர்மானிக்கப்படும்.

சு.க.வை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து பதவிகளையும் கைவிடுவதற்கு தயாராகவே இருக்கின்றோம்' என்றார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனிடம் வினவிய போது 'நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வு காணும் வழிமுறைகளை நாம் அரசாங்கத்திடமும் ஜனாதிபதியிடமும் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளோம்.

எனினும் அவை சாதகமான முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக விரும்பாவிட்டாலும் கூட அமைச்சுப்பதவிகளிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் தனித்து செயற்பட வேண்டிய நிலைக்கு சு.க. தள்ளப்படும் என்பதை கடிதம் மூலம் ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

இதற்கு குறைந்தபட்சம் ஒரு வார காலத்திற்குள் தீர்வினை எதிர்பார்க்கின்றோம்' என்றார்.

## எதிரணியின் போராட்டம்...

கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

"நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நீண்ட பல வருடங்களாக எமது நாடு எதிர்கொண்ட பொருளாதார சவால்களின் திரட்சியே இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

கடந்த காலங்களில் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு அவற்றில் வெற்றி பெற்ற எமது அரசாங்கம், தற்போதைய பொருளாதார சவால்களையும் முறியடிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது

இவ்வாறான நிலையில், மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தும் எதிரணிகள், மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்களை மேற்கொள்வதுடன் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான போராட்டங்கள் விளையாட்டுக் களங்களில் வீரர்கள் சவால்களை எதிர்கொள்ளுகின்ற போது, ரசிகர்களினால் வழங்கப்படுகின் உற்சாகமூட்டல்கள் போன்றே அமைந்துள்ளன.

ரசிகர்களின் உற்சாகமூட்டல்கள், விளையாட்டு வீரர்களுக்கு வெற்றியடைய வேண்டும் என்ற வைராக்கியத்தினையும் உந்துதலை ஏற்படுத்தவது போன்றே, எதிரணிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டங்கள் எமது அரசாங்கத்திற்கு உந்துதலாக அமைந்திருக்கின்றன.

எனவே, மக்கள் சகிப்புத் தன்மையுடனும் நம்பிக்கையுடனும் எதிர்வரும் சில நாட்களை எதிர்கொள்ள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

நகர அபிவிருத்தி கழிவகற்றல் மற்றும்
சமூக சுத்திகரிப்பு இராஜாங்க அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை

# பெறுகை அறிவித்தல்

## நேர அட்டவணையை நீடித்தல்

2022 மார்ச் 14ம் திகதி “சிலோன் டெய்லி நியூஸ்” பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 30 வருட காலத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான களுத்துறை நகர மத்தியில் உள்ள வர்த்தக கட்டிடத்தொகுதி அமைவிடத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு வாடகை அடிப்படையில் 23 விற்பனைக் கூடங்களை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட விலைமனு அழைப்பு விளம்பரத்தில் குறிப்பிடப்படும் விலைமனு ஏற்றுக் கொள்ளப்படும் மூடப்படும் திகதி மற்றும் விலைமனு விநியோகிக்கப்படும் திகதி கீழ்க்காணுமாறு திருத்தப்படல் வேண்டும்.

| விலைமனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் விநியோகிக்கப்படும் நேரம் | விலைமனுக்கள் ஏற்கப்படும் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|
| 2022 ஏப்ரல் 22 பி.ப. 3.00 வரை | 2022 ஏப்ரல் 25 பி.ப. 2.00 இற்கு |

**தலைவர்,**
**வருமான கேள்விச் சபை (சிறிய),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6ஆம் மாடி, ‘செத்சிரிபாய’,**
**பத்தரமுல்ல.**







# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

## 2022/2023ஆம் வருடத்திற்கான அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத கணனித் தாள்களை (Printed and Non Printed Computer) வழங்குவதற்கான பெறுகை

**ஒப்பந்த இல. 4/10/2/2022**

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வரைதல் தாள்கள் மற்றும் வர்ண பொன்ட் தாள்களை வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| லொட் இல. | வகை | ஒரு லொட்டிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5” x 8” I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 10 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 2. | 10.5” x 8” Printed Continues (4 colours) Certificates Paper (5 Grade scholarship) (100±2 GSM) | 300 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 3. | 15” x 12” I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 400 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 4. | 15” x 12” White Bond Two sides With Holes and Printed Continues Common Admission Sheets (80±2 GSM) | 200 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 5. | 15” x 12” Pink color Two sides with holes and Printed Continues Common results Sheets (80±2 GSM) | 200 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 6. | 9.5” x 12” Two sids with holes and printed Continues (Front four colour / Back single colour) Buddhist Dharmacharya (100±2 GSM) | 10 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 7. | 15” x 12” White Bond Two sides with holes Printed Continues Admission Sheets — A/L (80±2 GSM) | 200 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 8. | 15” x 12” White Bond Two sides with holes and Printed Continues Results Schedule—A/L (80±2 GSM) | 120 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 9. | 15’’ x 12” White Bond Two sides with holes and Printed Continues Attendant Sheets — A/L (80±2 GSM) | 60 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 10. | 15" x 12" White Bond Two sides with holes Printed Continues Result Register - A/L (80±2 GSM) | 70 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 11. | 15” x 12” White Bond Two sides with holes and Printed Continues Attendant Sheets - O/L (80±2 GSM) | 70 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 12. | 15” x 12” White Bond Two sides with holes and Printed Continues Results Schedule - O/L (80±2 GSM) | 210 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 13. | 15” x 12” White Bond Two sides with holes and Printed Continues Admission Sheets - O/L (80±2 GSM) | 350 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 14. | 15” x 12” White Bond Two sides with holes and Printed Continues Result Register - O/L (80±2 GSM) | 75 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 15. | 15” x 12” White Bond Two sides with holes and Printed Continues Admission Sheets - (5 Grade scholarship) (80 ± 2 GSM) | 180 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200-238 அல்லது 011-2785219) மற்றும் 2022-04-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2022-04-22ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 4850.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2022-07-24ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் 158,000.00 இலங்கை ரூபாவிற்கானதும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2022-08-23ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9 விலைமனுக்கள் 2022-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘2022/2023ஆம் வருடத்திற்கான அச்சடிக்கப்பட்ட மற்றும் அச்சடிக்கப்படாத கணனி தாள்களை வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: 4/10/2/2022” என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
**2022-04-04**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பரீட்சைகள் திணைக்களம்

## 2022/ 2023ஆம் ஆண்டிற்கு கடித உறைகள் மற்றும் பிரவுன் பேப்பர்களின் பெறுகை

**ஒப்பந்த இல: 4/10/1/2022**

1. கீழே குறிப்பிடப்படும் குறைந்தபட்ச அனுபவத்தைக் கொண்டுள்ள தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள 2022/ 2023 ஆம் ஆண்டிற்காக கடித உறைகள் மற்றும் பிரவுன் பேப்பர்களை வழங்குவதற்கான பெறுகைக்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களை, பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார். விலைமனு ஆவணங்களில் முழுமையான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| Lot No. | Type | No. of Items in the Lot |
|---|---|---|
| 1. | 9" x 5" Sackcraft Window Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 75 Packets (75000 Envelopes) |
| 2. | 9.5" x 4.5" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 50 Packets (50000 Envelopes) |
| 3. | 10.5" x 7.5" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 125 Packets (125000 Envelopes) |
| 4. | 15" x 10" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 750 Packets (750000 Envelopes) |
| 5. | 16" x 13" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 100 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 450 Packets (450000 Envelopes) |
| 6. | 17" x 14" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 100 Packets (100000 Envelopes) |
| 7. | 18.5" x 14.5" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 250 Packets (250000 Envelopes) |
| 8. | 19" x 14" Sackcraft Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 170 Packets (170000 Envelopes) |
| 9. | 19.5" x 16.5" Sackcraft Double Envelopes Printed (1000 Envelopes Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 250 Packets (250000 Envelopes) |
| 10. | 30" x 40" Sackcraft Brown Papers (250 Papers Nos)<br>GSM 80 ± 2<br>Machine Direction - 70 ± 5 Nm/g (Minimum)<br>Cross Direction - 30 ± 2 Nm/g (Minimum) | 560 Packets (140000 Papers) |

2. தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) முறைமையைப் பின்பற்றி விலைமனுக்கள் நடத்தப்படும்.
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது இருப்பதுடன் சம்பந்தப்பட்ட உருப்படி (உருப்படிகளை) விற்பனை செய்தல்/ வழங்குதலில் மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்ட இல. 03 இன் பிரிவு 6 இன் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் ஓர் செல்லுபடியாகும் சான்றிதழை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள், மேலதிக தகவல்களை பரீட்சைகள் திணைக்களம், 3ஆம் மாடி, வழங்கல்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி : 011-2786200 -238 அல்லது 011-2785219) மற்றும் 2022.04.22ம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீசீலிக்கலாம்.
6. 2022.04.22 பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன் வியாபாரப் பதிவுக் கடிதத்தின் பிரதியுடனான ஓர் எழுத்து மூல விண்ணப்பம் மற்றும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ரூபா 12,800.00 ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில், வழங்கல்கள் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். (24.07.2022)
8. விலைமனு ஆவணங்களில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இலங்கையில் இயங்கும் ஓர் நம்பகமான வர்த்தக வங்கியிலிருந்து இலங்கை ரூபா 575,000.00 பெறுமதியான நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்படல் வேண்டும் அத்துடன் விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (2022.08.23ம் திகதி வரை)
9. விலைமனுக்கள் 2022.04.25 பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 3ஆம் மாடி, வழங்கல்கள் பிரிவிற்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கபடாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு மேலே தரப்பட்டுள்ள முகவரியில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பொறியிடப்பட்ட விலைமனுக்கள், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“2022/ 2023 ஆம் ஆண்டிற்கான கடித உறைகள் மற்றும் பிரவுன் பேப்பர்களின் வழங்கல்களுக்கான பெறுகை” ஒப்பந்த இல. 4/10/1/2022** எனக் குறிப்பிடப்படாத சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. எந்த விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் எந்த நேரத்திலும் பாதிக்கப்படும் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களின் எந்த பொறுப்புக்களும் கவனத்தில் கொள்ளப்படாமல் அத்துடன் திணைக்கள பெறுகைக் குழுவின் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்படும் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களால் தெரிவிக்கப்படும் எந்தக்கடப்பாடுகளுக்கும் உட்படாது எல்லா விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு கொண்டிருக்கும்.

**பரீட்சைககள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
04.04.2022

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஏப்ரல் 4
திங்கட்கிழமை

## டிப்பர் சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கியதால் அமைதியின்மை



கிளிநொச்சி நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று டிப்பர் வாகன சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கியதால் அமைதியின்மை ஏற்பட்டது.

கிளிநொச்சி நகரத்தின் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்கள் குறிப்பிட்ட சில டிப்பர் வாகனங்களுக்கு மாத்திரமே பெருந்தொகையாக வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் அத்தியாவசிய தேவைகளுக்கான எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றன.

நேற்று நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பித்து இருக்கின்ற நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கான மண்ணெண்ணையை வழங்காது நூற்றுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகன சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்க வழிவகை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

திருநெல்வேலி பொதுச்சந்தையில் இதுவரை நடைமுறையில் இருந்த விவசாய உற்பத்தி பொருட்களுக்கான கழிவு முறைமை சனிக்கிழமை தொடக்கம் நீக்கப்பட்டு விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்க வழிவகை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகள் தற்போது சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10வீத கழிவு முறைமையால் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு மற்றும் மாவட்ட விவசாய குழுக் கூட்டங்களில் மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் நல்லூர் பிரதேசசபை தவிசாளருடன் கலந்துரையாடி கழிவு முறைமையை



நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவிக்கையில்;

நல்லூர் பிரதேசசபை முன்மாதிரியான நடவடிக்கையை மேற்கொண்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டத்தக்கது.

பொருளாதார நெருக்கடியான நிலைமையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் நஷ்டத்தை குறைக்கும் முகமாக திருநெல்வேலி சந்தையில் ஏற்படுத்தப்பட்ட நடைமுறை போன்று ஏனைய சந்தைகளிலும் விவசாய உற்பத்திகளுக்கான 10 வீத கழிவு முறைமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## வத்திராயனில் மாணவர்கள் கௌரவிப்பு





**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமசேவகர் பிரிவில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி எய்திய 6 மாணவர்களும் பல்கலை கழகத்திற்கு தெரிவாகிய இருவரும் கலைஞர்கள் இருவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வு சனிக்கிழமை வத்திராயன் கிராம அபிவிருத்தி மண்டபத்தில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் சிவபாதசுந்தரம் சிவகுமார் தலைமையில் இடம் பெற்றது.

முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மற்றும் சாதனையாளர்கள் விழா மண்டபம் வரை மலர்மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கு ஏற்றலுடன் ஆரம்பமானது.

இதில் வாழ்த்துரைகளையும், விருதுகள், பரிசில்களையும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி செ.சிறிராமசந்திரன், மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் UNAWK அமரசிங்க, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம அலுவலர் வ.தவராசா, வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு தலைவர் இ. முரளிதரன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் சண்முகநாதன், வத்திராயன் கிராம அலுவலர் திருமதி ராதிகா சதீஸ் உட்பட்ட விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர்.

வாகீசன் தரணிகன் எனும் மாணவன் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பிரிவில் முதலிடம் பெற்றுக்கொண்டமை குறிப்பிடதக்கது.



அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாடு பூராகவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை (02) மாலை 6 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் (03) தொடர்ந்து இடம்பெற்ற நிலையில் விதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. அந்த வகையில் நெல்லியடி நகர் பகுதியில் பிடிக்கப்பட்ட படம். (நாகர்கோவில் விஷேட நிருபர்)

## தமிழரசுக்கட்சிதான் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டும்

### சுரேஷ் தெரிவிப்பு



**கோப்பாய் குறூப் நிருபர்**

தமிழரசுக்கட்சி கூட்டமைப்பில் ஆரம்பத்தில் அங்கத்துவ கட்சியாக இருந்தது கிடையாது. இடையில் வந்து சேர்ந்தவர்கள், ஆகவே அதில் இருந்து வெளியேற வேண்டுமாக இருந்தால் தமிழரசுக் கட்சியே அதில் இருந்து தாங்களாகவே வெளியேற வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (01) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறுவது என்பது தமிழரசுக்கட்சியில் இருப்போருக்கு சந்தோஷமான விடயமாக அமையும் என்று சுமந்திரன் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இணைந்து உருவாக்கியது தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதில் தமிழரசுக் கட்சியோ அல்லது புளொட்டோ, ஆரம்பத்தில் அங்கத்துவ கட்சியாக இருக்கவில்லை.

ஆனால் அந்த ஆரம்பத்தில் இருந்த 4 கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈபி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டிய தேவைகள் ஏற்பட்டது. ஏனென்றால் கூட்டமைப்பு என்பது ஒரு அமைப்பு ரீதியாக சரியான வடிவமைப்பாக இல்லாத காரணத்தாலும், தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளும் கொள்கை ரீதியாகவோ அவர்களது செயற்பாடு என்பது தமிழ் மக்களது நலன்களை காப்பாற்றுவதாக இல்லாது இருந்தது.

இறுதியாக இன்று ரெலோவை வெளியேற்றுவதற்கும் இணைந்திருக்கக் கூடிய புதிய தமிழரசுக்கட்சியின் தலைவர்களாக தங்களை கருதிக் கொள்பவர்கள் இப்பொழுது அதில் இருந்து ரெலோ வெளியேறினாலும் தமிழரசுக்கட்சிக்கு சந்தோசம் என்று கூறுகின்றார்கள்.

உண்மையாகவே அதில் இருந்து ரெலோ வெளியேறுவதல்ல தமிழரசுக்கட்சி கூட்டமைப்பில் ஆரம்பத்தில் அங்கத்துவ கட்சியாக இருந்தது கிடையாது.

இடையில் வந்து சேர்ந்தவர்கள் ஆகவே அதில் இருந்து வெளியேற வேண்டுமாக இருந்தால் தமிழரசுக கட்சியே அதில் இருந்து தாங்களாகவே வெளியேற வேண்டும் என்பது தான் உள்ள விடயம் என்றார்.

## எரிபொருள் தீர்ந்ததில் நடுக்கடலில் தத்தளித்த மீனவர்கள்!

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டம் மாத்தளன் கடற்கரையில் இருந்து கடந்த 30.03.2022 அன்று கடற்றொழிலுக்காக படகு ஒன்றில் சென்ற இரண்டு மீனவர்கள் எரிபொருள் தீர்ந்த நிலையில் நடுக்கடலில் தத்தளித்து திருகோணமலை ஆழ்கடல் மீனவர் படகினால் மீட்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த 30 ஆம் திகதி புதுமாத்தளன் கடற்கரையில் இருந்து 30 லீற்றர் எண்ணெய்யுடன் கடற்றொழிலுக்கு சென்ற படகு ஒன்று இலங்கையின் கடல் எல்லையினைத் தாண்டி சென்று கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் கொண்டு சென்ற எரிபொருள் தீர்ந்துள்ள காரணத்தினால் நடுக்கடலில் தத்தளித்துள்ளார்கள்.

31 ஆம் திகதி கரை திரும்பவேண்டியவர்கள் மாலையாகியும் கரை திரும்பவில்லை என்றும் அவர்களின் தொடர்பும் இல்லாத நிலையில் மீனவர்களை காணவில்லை என கடற்றொழில் திணைக்களம் மற்றும் ஏனைய மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு மாத்தளன் பகுதி கடற்றொழிலாளர்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

## தடை செய்யப்பட்ட 300 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல்



**மன்னார் குறூப் நிருபர்**

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் சட்டவிரோதமாக மறைத்து வைத்திருந்த தடை செய்யப்பட்ட 300 கிலோ கடல் அட்டைகளை மெரைன் பொலிஸார் நேற்று (3) காலை பறிமுதல் செய்துள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் பகுதியில் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை மீனவர்கள் பிடிப்பதாக மெரைன் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்று (3) அதிகாலை கடற்கரையோரத்தில் ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் உள்ள மீன் கம்பெனி ஒன்றில் மெரைன் பொலிஸார் சோதனை செய்தபோது அங்கு சாக்கு பைகளில் தடை செய்யப்பட்ட உயிர் கடல் அட்டைகள் மறைத்து வைத்திருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து மெரைன் பொலிஸார் உயிருடன் இருந்த சுமார் 300 கிலோ எடையுள்ள கடல் அட்டைகளையும் இச்சம்பவத்தில் தொடர்புடைய மூவரையும் தனுஷ்கோடி மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்து வருகின்றனர்.

இந்த தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடத்த பதுக்கி வைத்திருந்ததா என்ற கோணத்தில் தொடர்ந்து மெரைன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## மொனராகலையிலிருந்து சிறுபோக நெற்செய்கைக்கு சேதன உரம்

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான சேதன உரம் மொனராகலை மாவட்டத்திலிருந்து 600 பார ஊர்திகளில் எடுத்து வரப்படவுள்ளதாக மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு 25,000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நிலப்பண்படுத்தலுக்குத் தேவையான எரிபொருள் பெற்றுக் கொள்வதில் கால தாமத நிலை காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் சேதன உரத்தைப் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட நிலையில் மொனராகல மாவட்டத்திலிருந்து 600 பாரஊர்திகளில் சேதன உரம் எடுத்து வரப்பட உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேதன உரத்தை ஏற்றி வரும் 600 லொறிகளுக்கும் தலா 250 லிற்றர் டீசல் வீதம் எரிபொருள் வழங்க வேண்டிய தேவை இருப்பதாகவும் மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலைச்சாரல்



## நுவரெலியா ரோட்டரிக்கழகத்தின் 56 வருட பூர்த்தி-விழா



**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா ரோட்டரிக் கழகம் ஆரம்பித்து 56 வருடங்கள் பூர்த்தி விழா (1) வெள்ளிக்கிழமை நுவரெலியா கொல்ப் கழகத்தில் நுவரெலியா ரோட்டரி கழகத்தின் தலைவர் ரோட்டேரியன் யோகேஸ் இராஜலிங்கம் தலைமையில் வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது.

இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இந்தியா டில்லி சிடி ரோட்டரிக் கழகத்தை சேர்ந்த ரோட்டேரியன் பிரதிப் ஜெயின், ரோட்டேரியன் அலோக் ஜெயின், செட்டீப் வைஸ் மற்றும் நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் ரோட்டேரியன் வேலுசாமி இராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# ஊரடங்கால் மலையக பெருந்தோட்ட நகரங்களின் இயல்புநிலை ஸ்தம்பிதம்

## தோட்டத் தொழிலாளர்கள் வழமை போன்று வேலை

**ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட நிருபர்கள்**

திடீர் ஊரடங்கு அறிவிப்பால் மலையக பெருந்தோட்ட நகரங்களின் இயல்புநிலை ஸ்தம்பிதமடைந்தது.







நகரையும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.ஊரடங்கு அமுலில் உள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஊரடங்கை மீறி செயற்பட முற்பட்ட சிலர், பொலிஸாரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பியனுப்பட்டனர்.மலையக நகர் பகுதி இவ்வாறு முடக்கப்பட்டிருந்தாலும் தோட்டப் பகுதிகளில் இயல்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கால் சிவனொளிபாதமலை யாத்திரை சென்ற 29 பேர் நிர்கதி

**ஹற்றன் விசேட நிருபர்**





திடீரென ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் நேற்று முன்தினம் சிவனொளிபாத மலை யாத்திரை சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த சுமார் 29 பேர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குறித்த யாத்திரியர்கள் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு மலையிலிருந்து இறங்கியதாகவும் அதனை தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதனால் செல்வதற்கு பொது போக்குவரத்து இல்லாததன் காரணமாக தற்போது புகையிரத ஓய்வு விடுதியில் தங்கியுள்ளனர்.

ஊரடங்கு காரணமாக கடைகள் மூடப்பட்டதனால் நேற்று முன்தினம் இரவு, நேற்றுக் காலை உணவின்றி இருந்தாகவும் அதனை தொடர்ந்து புகையிரத நிலையத்தின் பணியாளர்கள் நேற்று பகல் உணவு பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை செய்துள்ளதாகவும் புகையிரத நிலை சிற்றுண்டிசாலையினையும் இவர்களின் நலன் கருதி திறந்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவர்கள் பாணந்துறை,கொழும்பு,கம்பஹா,மாத்தறை உள்ளிட்ட வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதனால் அவர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக புகையிரத நிலைய பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த யாத்திரிகர்கள் இன்று ஊரடங்கு தளர்வையடுத்து புகையிரதத்தில் தங்களது வீடுகளுக்கு செல்லலாம் எனவும் அதுவரை அவர்களுக்கு தேவையான உணவுகளை பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை செய்துள்ளதாகவும் புகையிரத நிலைய பணியாளர் மேலும் தெரிவித்தார்.

# ஹற்றன் குடாகம பகுதியில் காளான் உற்பத்தி கிராமம்





**ஹற்றன் விசேட நிருபர்**

கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹற்றன் மேற்கு கிராம சேவகர் பிரிவில் காளான் உற்பத்தி கிராமம் ஒன்று உருவாகியுள்ளதாக விவசாய பரிசோதனை உதவி உற்பத்தியாளர் ஜே.ரபாய்டீன் தெரிவித்தார்.

சுமார் 280க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் குறித்த கிராமத்தில் பெண் அமைப்பு விடுத்து வேண்டுகோளுக்கமைய அரசாங்கத்தினால் சுமார் 6 இலட்சம் பெறுமதியான காளான் உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் இந்த கிராமத்தில் தற்போது 20 குடும்பங்கள் காளான் உற்பத்தி செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் மேலும் பலர் இணைந்து குறித்த முழு கிராமமும் காளான் உற்பத்தி கிராமமாக மாற விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இருபது குடும்பங்கள் காளான் உற்பத்தியில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த திட்டத்தின் மூலம் எமது பிரதேசத்தில் உள்ள பலருக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதாகவும் இதன் மூலம் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தினை பெருக்கிக்கொள்ள கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் களான் உற்பத்தியில் ஈடுபடுபவர் தெரிவித்தார்.



கல்வி மற்றும் பண்பாட்டு அபிவிருத்தி அமைப்பின் (பீட்) ஏற்பாட்டில் இரத்த தான முகாம் அரநாயக்க வில்பொல அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் அமைப்பின் தலைவர் எஸ். எம்.எம். மர்சூக் தலைமையில் நடைபெற்ற போது,...

# நுவரெலியா கந்தப்பளை சமர்ஹில் தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா கந்தப்பளை சமர்ஹில் தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனராவர்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் இன்று (4) திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு மஹா கணபதி ஹோமம் பூஜையுடன் ஆரம்பமாகும். நாளை (5) செவ்வாய்க் கிழமை காலை 9 மணி முதல் விநாயகர் வழிபாடு, விசேட யாக பூஜை,தீபாரதனை எனபன நடைபெறும்.

அத்துடன் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய் காப்பு சாற்றுதல் நடைபெறும்.நாளை மறுதினம் ( 6 ) புதன்கிழமை காலை 7 மணி முதல் 8 மணிவரை பால்குட பவனி நடைபெற்று விநாயகர் வழிப்பாடு யாக பூஜை,விசேட தீபாராதனை மற்றும் திருமுறை பாராயணம் என்பன நடைபெற்று காலை 9 மணிக்கு இராஜகோபுரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறும்.

அதனை தொடர்ந்து நண்பகல் மகேஷ்வர பூஜை நடைபெற்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அன்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜையினைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி வலம் வருதல் நடைபெறும். இதனை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும் என மஹா கும்பாபிஷேக ஏற்பாட்டுக் குழு தலைவர் எம். மகாலிங்கம் மதிவாணன் தெரிவித்தார்.

# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் நினைவேந்தல் கண்காட்சி; வரலாற்று பதிவுகளை திரட்டித் தருமாறு இ.தொ.கா கோரிக்கை



அமரர் ஆறுமுகன் தொண்டமானின் இரண்டாவது சிரார்த்த தினம் எதிர்வரும் மே மாதம் கொட்டகலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனைமுன்னிட்டு தேசிய தலைவரது ஆளுமையை இளைய தலைமுறையினரும் உள்வாங்கிக் கொள்ளும் வகையில் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளதாக இ.தொ.கா ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இக்கண்காட்சியில் அமரர் பயன்படுத்திய பொருட்கள் அவரது நினைவுகளின் நிழல்களாக விளங்கும் புகைப்படங்கள், விருதுகள், வரலாற்று பதிவுகளாக திகழும் கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் பலவும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இக்கண்காட்சியை பயனுள்ள வகையில் மிக பிரமாண்டமாக நடத்தவிருப்பதால் எமது மக்களும் தமது பங்களிப்பினை வழங்குவதற்காக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே, உங்களிடம் அமரர் ஆறுமுகன் தொண்டமான் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள், கடிதங்கள், குறிப்புக்கள் ஏதேனும் இருப்பின் அனுப்பி வைக்கவும். அவைகள் உங்கள் பெயர் விபரங்களுடன் கண்காட்சியில் இடம்பெறும். அமரரின் நினைவேந்தலை அர்த்தமுள்ளதாக்க அனைவரும் கை கோர்ப்போம். விபரங்களுக்கு சிரேஷ்ட ஊடக இணைப்பாளர், 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக cwcmedia72@gmail.com மற்றும் congressnewspaper@gmail.com ஆகிய மின்னஞ்சல் முகவரியூடாகவும், 0719455222 என்ற வட்ஸ்எப் இலக்கத்தினூடாகவும் நேரடி அவசரதேவைகளுக்கு 0716876548/0704329131 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

# பேருவளை பெலஸ்பாத் ஷாதுலிய்யா ஸாவியாவில் விஷேட ஸலவாத் மஜ்லிஸ்

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை பெலஸ்பாத் ஷாதுலிய்யா ஸாவியாவில் விஷேட ஸலவாத் மஜ்லிஸும் வபாத்தான ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபா மௌலவி ஜே.அப்துல் ஹமீத் (பஹ்ஜி) ஆலிமின் பெயரிலான கத்தமுல் குர்ஆன் தமாம், திக்ர் மஜ்லிஸ் மற்றும் துஆப் பிராத்தனை வைபவம் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் இக்பால் ஸம்ஸுதீன் தலைமையில் நடைபெற்றது.



சீனன் கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ) விஷேட பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். கொழும்பு உம்மு ஸாவியா நிர்வாக சபை சமய விவகார குழுத் தலைவரும் பலஸ்தீன முன்னாள் இலங்கை தூதுவருமான பௌஸான் அன்வர், மர்ஹூம் கலீபதுல் குலபா அப்துல் ஹமீத் ஆலிம் பஹ்ஜியின் சமய, ஆன்மீகப் பணிகள் தொடர்பாக பாராட்டிப் பேசினார்.

# இரண்டாயிரம் ஏக்கர் காணிகளில் புல் உற்பத்தியை மேற்கொள்ள திட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

நாட்டில் இரண்டாயிரம் ஏக்கர் காணிகளில் புல் உற்பத்தியை மேற் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.இதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.கரவை மாடுகளின் போஷாக்கு தன்மையை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இப் புல் உற்பத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக கால் நடை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. புல் உற்பத்தியை மேற்கொள்ள விரும்பும் பயனாளர்கள் இது சம்பந்தமாக உரிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கால் நடை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. வடக்கு,கிழக்கு,வட மத்திய மாகாணங்களுக்குள் இவ் உற்பத்தி திட்டத்தை முன் கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளன. தேசிய மட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் புதிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக ராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் இது பற்றி தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சுமார் 90 நாட்களில் இதற்கான பலனை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் எனவும்,ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 08 ஆயிரம் கிலோ வரையிலான உற்பத்தியை பெற்றுக் கொள்ள முடியுமாகவிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.





புனித ரமழானை வரவேற்போம் என்ற தலைப்பில் பேருவளை சீனன் கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் விஷேட நிகழ்ச்சிகள் அதிபர் மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ரஹ்மானி குமைதி) தலைமையில் மத்ரஸா மண்டபத்தில் நடைபெற்றது. மத்ரஸா மாணவர்களிடையே எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்தோடு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. (படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

# கிழக்கின் குரல்



# தனிச் சமூகமாக போராட்டம் நடத்துவது ஆபத்தை உருவாக்கும்

## ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் முஸ்தபா

நாட்டில் பெரும்பான்மை இன மக்கள் போராட்டம் நடத்தும் போது அதில் நாம் பங்கெடுப்பதில் எமது சமூகத்திற்கு இருக்கும் ஆபத்தை விட நாம் தனியாக போராட்டம் நடத்தும் போது இருக்கும் ஆபத்து அதிகம் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ள முடியும் என ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப பேரவையின் தவிசாளருமான கலாநிதி அன்வர் முஸ்தபா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,



எமது நாட்டில் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் அனுபவித்த கசப்பான சம்பவங்களின் உண்மையான காரணங்களில் முதன்மையானது ராஜபக்ஷ எதிர்ப்பு வாதம் என்பதை அறியாதவர்களல்ல நாம். இலங்கை தேசத்தின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றிய முஸ்லிம் சமூகம் நசுக்கப்படும் சமூகமாக கடந்த காலங்களில் இருந்து வந்தமைக்கான காரணம் எமது தலைமைகளின் பிழையான தீர்மானங்களே என்பதை கசப்பாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தனி அடையாளம் கொடுத்து தனியே முஸ்லிம்கள் பாதிக்கப்படும் பிரச்சினைகள் போன்று விம்பத்தை உருவாக்கி தனி முஸ்லிம்களின் போராட்டத்தை முன்னெடுப்பது இலங்கையில் வாழும் எதிர்கால முஸ்லிம் சந்ததிகளுக்கு ஆபத்தாக அமையும் என்பதை கடந்த கால வரலாறுகள் தெளிவாக எமக்கு எடுத்து காட்டியுள்ளன.

நாட்டின் மேம்பாட்டுக்காக இலங்கையர்களாக ஒன்றிணைந்து பிரார்த்திக்க வேண்டிய நேரத்தில் நாம் பேரணிக்காக தயாராவது பிழையான தீர்மானமாக அமைந்துள்ளது.

சரியான நேரத்தில் எடுக்கப்படும் பிழையான முடிவும் பிழையான நேரத்தில் எடுக்கப்படும் சரியான முடிவும் ஆபத்தை தரவல்லதாக அமைந்துவிடும் என்பதை கவனத்தில் கொண்டு முஸ்லிம் தலைமைகள் சமூகத்தை சரியாக வழிநடத்த வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து நடக்க வேண்டும்.

### நூறு கல்வி வலயங்களுள்

# மட்டக்களப்பு கல்வி வலயம் இரண்டாம் இடம்

### மட்டு.வலய கல்விப் பணிப்பாளர்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

2021ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி, மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில், இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தில் (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள 100 கல்வி வலயங்களுள் மட்டக்களப்பு கல்வி வலயம் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து 2,050 பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களுள் 449 பிள்ளைகள் வெட்டுப் புள்ளிக்குமேல் சித்தியைப் பெற்றிருக்கின்றார்கள்.



2020ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 433 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்று அகில இலங்கை ரீதியில் எமது வலயம் ஐந்தாம் இடத்தில் இருந்தது.


அதேபோல் சித்தி பெறுதல் என்ற அடிப்படையில் எமது கல்வி வலயம் தற்பொது இலங்கையில் 26ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. 2020ஆம் ஆண்டு 57ஆம் இடத்தில் இருந்தோம். இது மிகவும் முன்னேற்றகரமாக இருக்கிறது என்றார்.

# அம்பாறை, சாய்ந்தமருதில் மூதாட்டி கொலை: சந்தேகநபர் கைது

கல்முனை விசேட நிருபர்

அம்பாறை, சாய்ந்தமருதில் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாக இருந்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸாரினால் மட்டக்களப்பில் வைத்து குற்றவாளி கைது செய்யப்பட்டார்.

சாய்ந்தமருது புதுப்பள்ளி வீதியிலுள்ள வீடொன்றில் தனித்து வசித்து வந்த 83 வயதுடைய சுலைமான் செய்யது புஹாரி என்னும் மூதாட்டியை கொலை செய்து விட்டு தலைமறைவாகி இருந்த கொலை சந்தேக நபர் நேற்று மட்டக்களப்பு விடுதி ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.



மூதாட்டியிடம் இருந்த நகைகளை அபகரிக்கும் நோக்கில் இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரை பல நாள் தேடுதலின் பின்னர் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

# கிழக்கில் ஊரடங்குச் சட்டம் முழுமையாக அமுல்





மட்டக்களப்பு குறூப்,வாச்சிக்குடா விஷேட ,நிந்தவூர் குறூப் நிருபர்கள்

கிழக்கு மாகாணத்தில் நாடு தழுவிய ஊரடங்குச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டம் ஊரடங்குச் சட்டம் காரணமாக இயல்பு வாழ்க்கையை முற்றாக இழந்திருந்த்து. நகரங்கள் வெறிஞ்சோடிக் காணப்படுகின்றன. வாகனங்களின்றி பிரதான வீதிகள் அமைதியுடன் காணப்படுகின்றது.

வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. இராணுவமும் பொலிசாரும் நகரங்களில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளையும் தீவிப்படுத்தியுள்ளனர்.





நாட்டின் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்குமாறு வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி வெள்ளிக்கிழமை (1) மாலை அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சந்தியில் இருந்து ஆரம்பித்து அட்டாளைச்சேனை நகரப்பகுதி வரை ஊர்வலமாக சென்றது. இப்போராட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம்,தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்டார்.

# கிழக்கில் O Rh (D) பொசிட்டிவ் DcE/DcE (R2 R2) வகை குருதிக்கு பாரிய தட்டுப்பாடு

மண்டூர் குறூப் நிருபர்

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு அதிக குருதித் தேவையும் குறிப்பாக O வகை குருதித் தேவையே அதிகம் தேவைப்படுவதனால் குருதி கொடையாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு மட்டு. இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் குருதிக் கொடையாளர்களின் வரவு கணிசமாக குறைந்துள்ளதனால் போதனா வைத்தியசாலை உட்பட அனைத்து வைத்தியசாலைகளிலும் பாரிய குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

